விலை சதம் 70

பக்கங்கள் – 10

# ஈழநாடு
## வார மலர்

THE EELANADU VARAMALAR

[illegible] ஐப்பசி 10   ஜுல்ஹஸ் 16   ஞாயிற்றுக்கிழமை   (26—10—80)   இதழ் 257

திருப்திகரமான சலவைக்கு
மில்க்வைற் நீல சோப்
வாங்கி உபயோகியுங்கள்.
விலை ரூபா 1-25 சதம்
மட்டுமே!
மேலுறைகளை அனுப்பி
[illegible] பரிசுகளைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS LIBRARY
RECEIVED
1980-10-27
PERIODICALS DIVISION

யாழ். மாநகரசபையின் சுகாதார
விழாவை முன்னிட்டு
அண்ணா ஸ்தாபனத்தார்
அளிக்கும்
கே. எஸ், பாலச்சந்திரனின்
"முத்தாரம்"
"கோணர்சிற் சட்டநாதர்"
ஆகிய நாடகங்கள் இடம்பெறும்.
இடம்: யாழ். திறந்தவெளி
அரங்கு.
காலம்: 31-10-1980.

# தனிநாடு கோரிக்கையை கூட்டணி கைவிடவேண்டும்!

## கிராம ராஜ்யங்களை அமைக்க அரசுக்கு உதவுமாறு பிரதமர் கோரிக்கை

(மன்னார்)

"தனிநாடு காண்பதென்பது ஒரு பகற்கனவு. தமிழர் விடுதலைக்கூட்டணி தமது கோரிக்கையை மறந்துவிட்டு கிராமப்புற அபிவிருத்திக்கு அரசுடன் ஒத்துழைக்க முன்வரவேண்டும். தனி ராஜ்யம் அமைப்பதை விடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கிராம ராஜ்யங்களை அமைக்க முன்வரவேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்"

இவ்வாறு பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா, மன்னாரில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

மன்னார்த் தொகுதிக்குத் தனது முதலாவது உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு பிரதமர் மன்னார் வந்தார்.

மன்னாரில் புதிதாக அமைக்கப்பட்ட மாதா கிராமத்தை திறந்துவைத்தார். மடுத்திருப்பதியில் புதிய குழாய்நீர்த் திட்டத்தையும், மின் விநியோகத் திட்டத்தையும் பிரதமர் ஆரம்பித்துவைத்தார். பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திரு. பிரேமதாச தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இந்தத் தொகுதி, அரசாங் கட்சியைச் சேராத தொகுதி என்பதற்காக நாம் எந்த வித்தியாசத்தையும் காட்டவில்லை. இலங்கையிலுள்ள எல்லாத் தொகுதிகளையும் ஒரே சமமாகவே மதித்துவருகிறோம்.

"தமிழர் விடுதலைக் கூட்டணி, வேறொரு தமிழ் ராஜ்யத்தைக் கோரும் கட்சி என்பதை நீங்கள் அனைவரும் நன்கறிவீர்கள். மன்னார் பாராளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியைச் சேர்ந்தவர்தான். நான் அவரைக் கேட்டுக்கொள்வதென்ன வென்றால் நீங்கள் தனி ராஜ்யம் அமைப்பதை விடுத்து கிராம ராஜ்யங்களை அமையுங்கள்.

"நாங்கள் இலங்கை முழுவதும் கிராம ராஜ்யங்களை அமைப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளோம். எங்களுடைய நோக்கம் இந்த நாட்டிலே வாழும் சகல மக்களையும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டி எழுப்புவதுதான்"

(சு)

## வேலை இழந்தவர்களுக்காக இன்று நடக்கும் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்).

வீரமாகாளி அம்மன் கோவில் முன்றலில் இருந்து நடைபெறவிருக்கும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு பதவி இழந்தவர்களுக்கு நிதி கோருவதற்காக உண்ணாவிரதத்தில் வெளிநாட்டவர்களும் கலந்துகொள்ளவிருப்பதாகத் தெரியவருகின்றது.

உலகத்திருச்சபையைச் சேர்ந்த வண. டேவிட், சேவக ஜோஹான்தேவநந்த ஆகியவர்களுடன் வேறு சிலரும் கலந்துகொள்ளவிருக்கிறார்கள்.

இன்று மாலை 5-6 மணிவரை பின் யாழ் மறைப்பணி நடு நிலையத்தில் இதனையொட்டி கிறிஸ்தவர்கள் சார்பில் பிரார்த்தனையும் கலந்துரையாடலும் இடம்பெறும். வண. சவுந்திரநாயகம் அடிகளும், வண. சாம் டேவிட் அடிகளும் இதனை நடத்துவர்.

மாலையில் றிம்மர் மண்டபத்தில் சேவக ஜோஹான் தேவானந்த தலைமையில் பொதுக் கூட்டமொன்றுநடைபெறும்.

காலையில்நடைபெறவிருக்கும் உண்ணாவிரதத்தில் இவர்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்

10ம் பக்கம் பார்க்க)

யாழ்.பிரதேசத்தில் பாதாள ஆற்றுடன் கழிவு கலக்கிறது

## குடிநீர் அசுத்தமடைவதால் மர்ம நோய்கள் ஏற்படலாம்!

### பல்கலைக்கழக குழுவினர் நடத்திய ஆய்வின் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் பிரதேசத்தில் குடிநீரில் கழிவு நீர் கலப்பதினால் மர்மமான வயிற்று நோய்கள் ஏற்பட்டு பொதுமக்கள் கஷ்டமுறக் கூடிய அபாயம் தோன்றி வருவதாக வைத்திய மாணவர்களும் விரிவுரையாளர்களும் அடங்கிய குழுவொன்று எச்சரிக்கை செய்துள்ளது.

யாழ் பல்கலைக்கழகத்தின் கைதடி வைத்திய பீட மாணவர்கள் சிலரும் விரிவுரையாளர்களும் பேராசிரியர் [illegible]வரின் தலைமையில் யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களிலுமுள்ள குடிநீர் கிணறுகளில் ஆய்வு நடத்தினர். இந்தக் கிணற்று நீர் அசுத்தமடைவதினால் நெருப்புக் காய்ச்சல் போன்ற வருத்தங்கள் ஏற்பட ஏதுவுண்டாகுமாவென ஆராய முற்பட்ட இவர்கள் இந்த நீரினால் வேறு மர்மமான வயிற்று நோய்களும் ஏற்பட முடியும் என்ற முடிவுக்கு வந்துள்ளனர். யாழ். பிரதேசத்தில்நீரடைப்பு

(10ம் பக்கம் பார்க்க)

## கப்பல்துறை பொறியியல்

(கொழும்பு)

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் கப்பல்துறை பொறியியல் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

நாட்டில் கப்பல்துறைப் பொறியியலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள [illegible] நிவர்த்தி செய்யும் முகமாகவே இப்பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

(சு)

ஹோம் பினன்ஸ்
லிமிட்.
82, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.
வருடாந்தம் ஆகக்கூடுதலான
25% வட்டியை
வழங்குகின்றது
ரூபா 1000/–க்கு மேற்பட்ட
எந்த முதலீட்டிற்கும்
மாதாந்தம் வட்டி வழங்கப்படும்
உங்கள் பணத்தை
விவேகமாக
முதலீடு செய்யுங்கள்
தலைமையகம்:
463, காலி வீதி கொழும்பு-3
தொலைபேசி : 89190

வாலிபரே திரண்டு வருக!
கிறிஸ்துவுக்காக இளைஞர் சங்கம் அளிக்கும்
நகைச்சுவை நாடகம், இன்னிசை
நிகழ்ச்சி நிறைந்த
"அன்பின் தொனி"
வாலிப நிகழ்ச்சி
விசேஷ பேச்சாளன்: பாரத வாலிபர் விரும்பிக்கேட்கும்
திரு. விக்டர் மனோகரம்
இடம்: வீரசிங்கம் மண்டபம்
ஒக்டோபர் 31-10-80 — நவம்பர் 1-11-80
தினசரி மாலை 5-00 மணி
இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
பிரவேசம்: இலவசம்! இலவசம் இலவசம்!
7156

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனைக்கு

**பாக்கு சீவும் இயந்திரம்**

உடன் விற்பனைக்குண்டு

கையால் இயக்குவது.

நேரில் பார்வையிடலாம்

**முகமதலி அப்துலலி**

5—7 பெரியகடை, யாழ்ப்பாணம்.

போன்: 515



சுன்னாகம் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது) சுன்னாகம்.

# முக்கிய அறிவித்தல்

**பகிரங்க ஏலத்தில் புடவை விற்பனை**

தீபாவளித் திருநாளை முன்னிட்டு எமது சங்க இருப்பிலுள்ள பேபி சூட்டுகள், சாறிகள், சேட் வகைகள், கைத்தறிப் புடவை வகைகள் முதலியன பகிரங்க ஏலத்தல் பின்வரும் திகதிகளில் சுன்னாகம் நவீன சந்தைக் கட்டிடத்திலும், மருதனாமடம் சந்தையிலும் வைத்து விற்பனை செய்யப்படும்.

"இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பாவனையாளர்கள் தவற விடாதீர்கள்"

| திகதி | நேரம் | இடம் |
|---|---|---|
| 31-1C-80 | காலை 6-00 மணி நண்பகல் 12-00 | சுன்னாகம் சந்தை |
| 1-11-80 | காலை 6-00 மணி - முற்பகல் 10-00 | மருதனாமடம்சநதை |
| 2-11-80 | காலை 6-00 மணி - முற்பகல் 10-00 | ,, |
| 3-11-80 | காலை 6-00 மணி - நண்பகல் 12 00 | சுன்னாகம் சந்தை |
| 5-11-80 | காலை 6-00 மணி - நண்பகல் 12-00 | ,, |

**பொது முகாமையாளர்**

சுன்னாகம்,
பல நோ. கூ. சங்கம்.
13-10-0. 7179


## 8 பிள்ளைகளின் தாய் தற்கொலை

(பண்டத்தரிப்பு)

வறுமை காரணமாக எட்டுப் பிள்ளைகளின் தாயார் ஒருவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்ட பரிதாபகரமான சம்பவம் சுதுமலை கிழக்கில் நடைபெற்றுள்ளது. சுதுமலை கிழக்கைச் சேர்ந்த தம்பிமுத்து பரமேஸ்வரி என்னும் 40 வயதுடைய பெண்ணே இவ்வாறு தன்னுயிரை மாய்த்துக் கொண்டவராவர்.

இவரது மரணவிசாரணை திடீர் மரணவிசாரணை அதிகாரியும், உத்தியோகப்பற்றற்ற நீதவானுமாகிய திரு. கே. சேனாதிராசா முன்னிலையில் நடைபெற்றது. அத்தருணம் காலம் சென்றவரின் கணவர் தம்பிமுத்து சாட்சியமளிக்கையில், தங்கள் குடும்பம் போதியளவு வருமானம் இல்லாதபடியால் உணவுக்குக்கூட மிகவும் கஷ்டநிலை ஏற்பட்டிருப்பதாகவும் பிள்ளைகள் பட்டினியால் வாடுவதையிட்டுக் காலஞ்சென்றவர் மிகவும் மனமுடைந்திருக்க காணப்பட்டதாகவும் கூறினர்.

காலஞ்சென்றவரின் சகோதரி இரத்தினசபாபதி சரஸ்வதியும் சாட்சியமளித்தார். விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

சாட்சிகளை ஆனைக்கோட்டைப் பொலிசைச் சேர்ந்த திரு. எம், குருசாமி ஆஜர் செய்தார். (அ)


# மேர்ச்சன்ட் பினன்ஸ் லிமிட்டெட்

**புதிதாயினும், அதிஉன்னத பாதுகாப்பான நிதி நிறுவனம்**

உங்கள் பண வைப்புக்களுக்கு கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களை வழங்குகிறது.

**ஒரு வருட வைப்புத்திட்டங்கள்**

மாதாந்த வட்டிக் கொடுப்பனவு — 24% வருடமொன்றிற்கு

முதிர்வுகால வட்டிக் கொடுப்பனவு — 25% வருடமொன்றிற்கு

**சேமிப்பு வைப்புக்கள்**

6 மாத முன்னறிவித்தலில் செக்லெற் மூலம் மீளப் பெறக்கூடியது — 17% வருடமொன்றிற்கு

உரிய வட்டி விகிதக் குறைப்பனவுடன் ஆனல் வருடமொன்றிற்கு

12% இற்கு

குறையாத வட்டியுடன் ஒருநாள் முன்னறிவித்தலிலும் வைப்புக்கள் மீளப் பெற அனுமதிக்கப்படும்.

ஏனைய வைப்புத் திட்டங்களின் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

செ. லோகநாதன்
முதல்வர்

129, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8183

கொழும்பு முகவர் நிலையம்:
52/1, ராஜசிங்க வீதி,
[illegible]


# வரிவிளம்பரம்


### விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லையில் வண்ணார்பண்ணை வடமேற்கில், மானிப்பாய் வீதியிலிருந்து 50யார் தூரத்துக்குள், பொன்னையா ஒழுங்கையில் ஐந்து பரப்புக்காணி சிறிய வீடுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டியவர். V. P, தர்மராஜா 39, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. 7173

மானிப்பாய் பரிஷ். ப. நோ. கூ. சங்கம்

**வெற்றுச் சாக்கு விற்பனை**

மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கத்தில் 2885 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்குண்டு. சங்கத்தால் விநியோகிக்கப்படும் கேள்விப்பத்திரத்தை ரூபா 200/- முற்பணம் செலுத்தி வாங்கிப்பூரணப்படுத்தி, பொது முகாமையாளர், மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கம், மானிப்பாய் என்ற முகவரிக்கு 30-10-80ம் திகதிக்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக அரக்கு முத்திரை இடப்பட்ட பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்
7183

**காணி விற்பனை**

யாழ். நகருள் K. K. S. ரோட்

நாவலர் சந்திக்கும், யாழ் இந்துக் கல்லூரிக்கும் மத்தியில், 2 5/8 நிலப் பரப்பு. விபரங்களுக்கு:

பொ. நவரத்தினம்
சட்டத்தரணி,
கொக்குவில். 7132

**பிறந்த தின வாழ்த்து**



செல்வி M. ஐவ்ஸானா

M. S. மன்சூர் நூர்ஜஹான் தம்பதிகளின் தவப்புதல்வி M ஐவ்ஸானா தனது முதலாவது பிறந்ததினத்தை றஹீமா வீதியில் உள்ள, அவர் இல்லத்தில் 24-10-80ல் மிகவும் சிறப்பாகக் கொண்டாடினார். இவரை (சவூதி அரேபியா) பெரியப்பா சபூர், சவூதி அரேபியா (ஜித்தா) சாச்சப்பா சநுள்ளான், மாமா, மாமி, அப்பா, வாப்பச்சி, உம்மம்மா, மாமன், சாச்சிமார், மச்சான்மார், ராத்தாமார், நண்பர்கள் யாவரும் நீடூழி வாழ்க என வாழ்த்தினார்கள். 7184

### விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கு வடக்கேசுமார் 1½ லட்சம் ரூபா பெறுமதியான வீடும், வளவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. சிவசுப்பிரமணியம், ஆசிரியர், ஒவியம், அங்கிற்றல் லேன், உடுவில் 7164

இருபாலை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அருகாமையில் டச்சு ரோட்டில் மின்சார வசதியுடனும் பஸ் போக்குவரத்துடன் புதிய வீடுவளவு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். செ. சத்தியமூர்த்தி (மனேச்சர்) தாவடி, கொக்குவில். 7174

ஹொண்டா CB 125 டிஸ்க் 1977, Z50 - 82 ஸ்ரீ 5477, (90 Kick / Self கையிருப்பிலுண்டு. 'ஹாஜிசன்ஸ்' 57, கன்னாதிட்டி, யாழ்ப்பாணத்தில் பார்வையிடலாம். 7176

80 ஸ்ரீ தொடர்பிலக்க ஸூசுக்கி A 100 விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- "சீப் சென்றர்", பஸ் நிலையம் சுன்னாகம். 7177

இரண்டு மாத பேட்டுக் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. இ. பரஞ்சோதி "வசந்தம்" இணுவில் வீசி, மானிப்பாய். 7185

இசுஸ் இ. எல். எவ். வான் ஜப்பானிலிருந்து அண்மையில் இறக்குமதி செய்யப்பட்டு பதிவு செய்யப்படாத நிலையில் விற்பனைக்கு உண்டு. பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்குரிய ஆசனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இன்று 658/1 கே. கே. எஸ். வீதி நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணத்திலும் கிழமை நாட்களில் காந்தா மோட்டர்ஸ் ஸ்ரான்லி வீதியிலும் பார்வையிடலாம். 7186

### பயிற்சி

3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 27-10-1980ல் ஆரம்பமாகின்றது. Institute of Engineering Technology 9/1, Stanley Road Jaffna. 7161

### வகுப்புக்கள்

மோட்டார் மெக்கானிசம், எலக்ரிக்கல் வயரிங், வெல்டிங், ஆகியவற்றின் புதிய வகுப்புக்கள் ஒவ்வொரு மாத முதல் பகுதியிலும் ஆரம்பிச்சப்படும். தொடர்பு கொள்க:- Patrician Industrial Institute 59, St Patrick's Rd, Jaffna. 7146


## பாட்மின்டன் போட்டி

(பண்டத்தரிப்பு)

வடமாகாண பாட்மின்டன் கழகத்தின் ஆதரவில் நடைபெறும் வருடாந்த பாட்மின்டன் போட்டிகள் மானிப்பாய் இந்துக்கல்லூரி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, சென், ஜோன்ஸ் கல்லூரி, யாழ். இந்துமகளிர் கல்லூரி ஆகியகல்லூரி விளையாட்டரங்குகளில் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் 10 வயது, 12 வயது, 14 வயது, 16வயது, 18 வயது, 20 வயது ஆகிய வயதுக்குட்பட்ட மாணவ மாணவிகள் பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள். இம்முறை 10 வயதுக்குட்பட்டவர்களுக்கும் முதல் தடவையாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப் போட்டிக்கான ஒழுங்குகளை சழகச்செயலாளர் திரு. ஜே. கனகராசா மேற்கொண்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "மண்ணை உண்ட மாயவன்"

த. சண்முகசுந்தரம்

''இராமநாதபுரம் பரமக்குடி முருகன் மாயவன்...... இராமநாதபுரம் பரமக்குடி முருகன் மாயவன்'' காங்கேசன்துறை விமானநிலையச் சுங்க அதிகாரி மிகவும் மிடுக்காகக் கூப்பிட்டார். மாயவனைக் காணவில்லை. நான் எழுந்தேன்.

''நீங்கள் மாயவனோ?'' என்றார் அந்த அதிகாரி. என்னுடைய நாகரிகமான தோற்றத்தையும், நடை உடையையும் கண்ணுற்ற அந்த அதிகாரி அப்படிக் கேட்கின்றார் என்பது எனக்கு விளங்கிவிட்டது.

''இல்லை. அந்த ஆளை நான் தான் கூட்டிக்கொண்டுவந்தேன். இப்படிப் பெட்டியை வைத்துவிட்டு எங்கோ போய் விட்டார்'' என்றேன்:

''நல்லது, வரட்டும்'' என்றார் அந்த அதிகாரி. என்னுடைய தோற்றத்திற்கு அவர் மரியாதை செலுத்தினார் என்பது வெளிப்படை. நான் எழுந்து சுற்றுமுற்றும் பார்த்தேன். சற்றுப் பரபரப்புடன் மாயவன் வந்தான். என்னையும் மாயவனையும் மாறிமாறிப் பார்த்தார் அந்தச் சுங்க அதிகாரி. என்னுடைய நாகரிகமான தோற்றம் ஒருபுறம். உழைத்து உழைத்து ஓடாகப் போன மாயவனின் தோற்றம் ஒருபுறம். நாலு முழ வேட்டி, கத்தரிப்பூ நிறச் சட்டை, எலும்பைக் கக்கும் முகம். நரைத்த தலை. கடின உழைப்பினால் இழைத்துப்போன கைகள். இப்படிக் காட்சிதந்தான் மாயவன். காலிலே மலிவான இறப்பர்ச் செருப்பு.

''ம்...... பெட்டியைத் திற'' என அதட்டினார் அந்தச் சுங்க அதிகாரி,

''ஐயா! சாமி! திறப்புத் தொலைந்துவிட்டது'' என்றான் மாயவன்.

''ஓகோ! எல்லாக் கள்ளக் கடத்தல்காரரும் இப்படித்தான் சொல்வார்கள். உந்த வேலை இங்கே சரிவராது'' என்றார் அந்த அதிகாரி.

''சாமி! நான் எதையும் கடத்தவில்லை. கடத்த என்னிடம் ஒன்றுமில்லை. என்னுடைய நெஞ்சைத்தான இங்கே, இந்த ஊரிலே வைத்துவிட்டுப் போகிறேன்'' என்றான் மாயவன்.

''நல்ல அழகான பேச்சு'' என்றார் அந்த அதிகாரி.

நான் தலையிடவேண்டிய நேரம் வந்துவிட்டது என்பதை உணர்ந்தேன்.

''இந்த ஆள் அப்படியானவர் இல்லை. தேவையென்றால் பெட்டியை உடைத்தும் பார்க்கலாம்'' என்றேன். அந்த அதிகாரி ஒன்றும் பேசவில்லை.

ஐயா! சாமி! துரை! இருபது ரூபா கொடுத்து வாங்கின பூட்டு. உடைச்சால் துட்டு நட்டம்'' என்றான் மாயவன்.

''பத்து நிமிடம் தருகிறேன். திறப்பைத் தேடி எடு. இல்லாவிட்டால் பெட்டி உடைபடும்'' என்றார் அதிகாரி. கோடை வெய்யில்போல அவரின் பேச்சு.

''மற்றத் திறப்பு எங்கே?'' என்றேன்.

''அதைப் பெட்டிக்குள்ளே வைத்துப் பூட்டிவிட்டேன்'' என்றான மாயவன்.

''நல்லது. ஆறுதலாகத் தேடிப்பார்'' என்றேன்.

''அப்படியே சாமி, தாங்கள் இப்படி இருந்தால் போதும். நான் தேடிப் பார்க்கின்றேன்'' என்றான் மாயவன்.

கதிரை ஒன்றிலே சாய்ந்தபடி நான் இருந்தேன். மாயவன் அங்கு இங்கெல்லாம் திறப்பைத் தேடினான். என் உள்ளத்திரை எனக்குள் மிகவும் வேகமாக ஓடத்தொடங்கியது. அதனை யாரும் தடுக்க முடியாதுதானே?

எனக்கு மாயவனைக் கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகளாகத் தெரியும். தெரியும் என்றால், மிகவும் நல்லாகத் தெரியும். சுன்னாகம் பட்டினசபைத் தலைவராகவும் இருந்திருக்கின்றேன். எனவே மாயவன் எனக்குக் கீழ் வேலையும் பார்த்திருக்கின்றான். மாயவனுக்கு இப்போது வயது சுமார் ஐம்பது இருக்கும். அவன் பிறந்து வளர்ந்ததும் சுன்னாகத்திலேதான். அவனின் தகப்பனார் பெயர் முருகன். இந்த முருகன் எப்போதோ இந்தியாவிலிருந்து இங்கு வேலைக்குக் கொண்டுவரப்பட்டவன். முருகன் நகரசுத்தித் தொழிலாளி. முருகனின் மனைவியும் இங்கேதான் இருந்தாள். சில ஆண்டுகள் செல்ல முருகனின் மனைவி இறந்துவிட்டாள். பண்பு நிரம்பிய முருகன் மறுமணம் செய்துகொள்ளவில்லை. மாயவனை வளப்பதிலேயே முழுக்கவனத்தையும் செலுத்திவந்தான். மாயவனைப் பள்ளிக்குக்கூட அனுப்பிவைத்தான். உயர்சாதிப் பிள்ளைகள் வாங்கு மேசையில் இருந்து படித்தனர். மாயவன் நிலத்திலே இருந்து படித்தான். அந்த நிலை அப்போது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்று. மாயவனின் இருக்கைதான் நிலத்தில்; ஆனால் அவனின் அறிவு மேல் நோக்கி வளர்ந்தது. கணக்குப்பாடம் என்றால் மாயவனின் மூளை காந்தம்போல இருக்கும். எந்தப்பாடத்தையும் இரண்டுமுறை பார்த்தால் மாயவனுக்குப் பாடம் வந்துவிடும். ஆனால் பாழும் தம்பையாபிள்ளை என்ற தலைமை ஆசிரியர் மாயவனுக்கு அதிகம் புள்ளிவராமல் பார்த்துக் கொள்வார். உயர்சாதிப் பிள்ளைகளுக்குக் கைவேலை, பாட்டு போன்ற பாடங்களுக்கு அதிகம் புள்ளிபோடுவார். இதனால் மாயவன் ஐந்தாம், ஆறாம் பிள்ளையாகவே வருவான். மாயவனின் விவேகம் [illegible] பாடசாலையின் பேச்சு. இப்படியாக மாயவன் ஐந்தாம் வகுப்புவரை படித்தான். ஐந்தாம் வகுப்புக்கு மேல் அந்தப் பள்ளிக்கூடத்தில் வகுப்பில்லை. [illegible]ளிக்குப் போகக்கூடிய துணிச்சல் மாயவனுக்கு இல்லை, அனுப்பக் கூடிய பொருள்வசதி முருகனுக்கு இல்லை, வறுமையும் தாழ்வுமனப்பான்மையும் நெருப்பும் காற்றும்போல ஒன்று சேர்ந்துவிட்டன. தந்தையின் குலத்தொழிலில் மாயவன் ஈடுபட்டான். காகத்தின் குஞ்சுக்குக் 'காகா' என்று கத்துவதற்குச் சொல்லிக்கொடுக்கத் தேவையில்லை. தன் குலத் தொழிலில் மாயவன் மிகவும் ஈடுபட்டான். அதிலே ஒன்றிப்போனான். மிகவும் இளமையில் மணஞ்செய்த மாயவனுக்கு இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தன. மாயவனின் தந்தை இறந்த சிலகாலத்தில் மனைவியும் கண்ணை மூடிவிட்டாள். மாயவனின் பெண்பிள்ளைகள் இரண்டும் இலங்கையில் பிறந்து வளர்ந்து இரண்டு இளைஞரை மணந்து கொண்டார்கள். வறுமையும் ஏழ்மையும் ஆறும் கடலும் போலச் சங்கமமாகிவிட்டன.

என் மனத்திரை இப்படி ஓடிக்கொண்டிருந்தது. தன் தள்ளாமை காரணமாக மாயவன் வேலையிலிருந்து அகாலமாக ஓய்வுபெற்றான். அத்துடன் அவனுக்கு வந்தது வினை. நல்வினை இல்லை. தீவினை. மாயவனுக்கு நடு கடத்தல் உத்தரவு வந்தது. மாயவன் எத்தனையோ மனுக்களை எழுதினான். பதிவுத் தபாலில் அனுப்பினான். அவசரக் கடிதமாக அனுப்பினான். குடிப்பதிவு உயர் அதிகாரிகளுக்குக் கருங்கல் மனம். மாயவனுக்கு நாடுகடத்தல் உத்தரவு வந்தது, தமிழ்நாட்டையோ பரமக்குடியையோ மாயவன் அறியான், இருந்தும் இப்போது தமிழ்நாட்டைநோக்கி அவன்புறப்படுகிறான். யாரோ தூரத்து உறவினர் ஒருவருக்கு எழுதியிருக்கிறான். அவ்வளவு தான்.

''ஐயா! சாமி! திறப்புக் கிடைக்கவில்லை'' என்றான். திடுக்கிட்ட நான் இந்த நில உலகிற்கு வந்தேன். என் மனத்திரையின் ஓட்டம் நின்றது. மாயவனின் பரிதாபமான பார்வை என்னைக் கலக்கியது. நரைத்துப்போனதலை மயிர்; நரைத்துப் போன மீசை, குழிவிழுந்த கண்கள், இருமி இருமி அடைத்த தொண்டை. சோகமே உருவான உடல் இருந்தாற்போல என் மூளை வேலைசெய்தது.

''மாயவ ! உன் சட்டைக் கைமடிப்பைப் பார்'' என்றேன்.

சட்டைக்கை மடிப்பை ஒவ்வொன்றாக விரித்தான் மாயவன், ஆமைப்பூட்டுத் திறப்பு கணீர் என விழுந்தது. இத்தனையையும் ஆந்தைபோலப் பார்த்துக்கொண்டிருந்த சுங்க அதிகாரி தொண்டையைக் கனைத்துக்கொண்டு பேசத் தொடங்கினார்.

''ஏ! மாயவா! ஏது இங்கு வித்தை காட்டுகிறாயோ? திறப்பை வைத்துக்கொண்டு மாயவித்தை செய்ததுபோதும். பெட்டியில் என்னஇருக்கிறது? ம் ...... சொல், கள்ளக்கடத்தல் முயற்சியோ? சட்டுப்புட்டென்று பெட்டியைத் திற, இல்லாவிட்டால் இதோ பொலிசில்............''

இந்தக் கடினமான பேச்சைக் கேட்ட மாயவனின் கை நடுங்கியது. பெட்டியை அவனால் திறக்கவியலவில்லை. திறப்பை வாங்கித் திறந்தேன்.

''இந்த மாயவனுக்கு நீங்களும் உதவிதானே? கள்ளக் கடத்தலுக்கு நீங்களும் பக்க [illegible]'' என்றார் அந்த அதிகாரி.

''பொத்துவாயை!'' என்றேன் ஆங்கிலத்தில் அந்த அதிகாரி அசந்து போனார்.

''சரி! யார் பொத்துவாயை என்பதைப் பின்னர் பார்க்கலாம்'' என்றார்,

''சரி. பார்க்கலாம்'' என்றேன்?

மாயவனின் பெட்டியைத் திறந்துவிட்டேன். ''மாயவா! ஒவ்வொன்றாக எடுத்து இந்தக் கௌரவமும் கண்ணியமும் மிக்க ஐயாவிற்குக் காட்டு'' என்றேன்.

மாயவன் ஒவ்வொன்றாக எடுத்து உதறிக் காட்டினான். புதுத்துணிகள், பழந்துணிகள் மாயவன் உடலைப்போல நைந்து கிழிந்து போனவை சவக்காரப் பெட்டி ஒன்று பால்மாத் தகரம் எல்லாவற்றையும் தேடினார் அந்த அதிகாரி. எதுவும் அகப்படவில்லை. மிகவும் அவசரம் அவசரமாகப் புன்னகையை அந்த அதிகாரி வரவழைத்தார். இப்படியான கடூரமான முகத்திலிருந்து சிறுநகை வரும் என நான் எண்ணவும் முடியவில்லை. பின்னால் திரும்பிப் பார்த்தேன். நடனமாது போல அலங்காரம் செய்த பெண் ஒருத்தி நின்றாள்.

''அம்மா! அப்படி இருங்கள் இதோ வந்துவிட்டேன். சரி மாயவா! இது என்ன? இந்த அலுமினியப் பெட்டியில்?'' என்றார் அந்த அதிகாரி. என் உள்ளம் 'திக் திக்' என அடித்தது.

''அதுவோ துரை; அது வந்து ...... வந்து......''

''எது வந்து? சொல்லித் தொலை''

''அது வந்துசாமி...... இந்த ஊர் மண். ஒரு பிடி மண். நான் பிறந்து வளர்ந்த ஊர் மண். இங்கே இறக்க வேண்டும். இங்கேதான் என் உடல் எரிய வேண்டும் என நினைத்தேன். சட்டம் இடம் தரவில்லை. அதுதான் சாமி நான் பிறந்து வளர்ந்த ஆனால் இறக்கக் கொடுத்து வைக்காத இந்த நிலத்திலிருந்து ஒருபிடி மண்......'' எனமாயவன் அழாக்குறையாகச் சொன்னான்.

''அதுசரி. கமத்தொழில் திணைக்களத்திடம் அனுமதி பெற்றாயா?'' என்றார் அதிகாரி. என்று சொன்னவர் அந்த அலுமினியப் பெட்டியை வெளியே எடுத்து வைத்தார்.

''இதைக் கொண்டுபோக முடியாது. சரி உன் பெட்டியைப்பூட்டு'' என்றார்.

''அம்மா! இப்படி உங்கள் பெட்டியைத் திறவுங்கள்...... ம்...... சரி...... ஒன்றும் இல்லைத் தானே. சரி பூட்டுங்கள் பெட்டியை'' என்றார். அந்த அழகி நாட்டிய நாடக நடிகை போலப் பெட்டியைப் பூட்டினாள். பின் விமான நிலையத்திற்கு உள்ளே போய் இருந்தாள்.

''மாயவா! இப்படிவா! இந்த அலுமினியப் பெட்டியை நீ கொண்டு போக முடியாது. சட்டப்படி அது பிழை. நீ என்ன செய்யப்போகிறாய்?'' என்றார்.

''ம்...... ஒன்றும் செய்ய முடியாது'' என்றான் மாயவன்.

''நல்லது அந்த அலுமினியப் பெட்டியை இப்படிக் கொடுங்கள். மண்ணைக் கொட்டிவிட்டு மாயவன் பெட்டியை என்றாலும் கொண்டு போகட்டும். வெறும் பெட்டியே ஐந்து ரூபா பெறுமதி என்றேன்.

ஏதோ பெரும் வெற்றி ஒன்றை ஈட்டிய பூரிப்பிலே அந்த அதிகாரி பெட்டியை மாயவனிடம் கொடுத்தார்.

''மாயவா! அந்தக் குப்பைத் தொட்டியில் மண்ணைக் கொட்டிப்போட்டு வா!'' என்றேன்.

''குப்பைத் தொட்டிதானே சாமி என் வாழ்க்கை. இதோ கொட்டிப் போட்டு......'' என்று மாயவன் போனான்.

விமான நிலையத்திற்குச்சுங்க அதிகாரிகள் இருவர் விரைந்து வந்தனர். அந்த அழகான பெண்ணிடம் நேராகப் போயினர்; போய் அவரின் கைப் பெட்டியைச் சோதனை செய்தனர். சோதனையின் பின்னர் அவரை அழைத்துக் கொண்டு வந்தனர். என்னுடன் நட்புறவுகொண்டாடிய சுங்க அதிகாரியிடம் வந்தனர்.

''நீங்கள் தானே இந்த அம்மாவின் பெட்டியைப் பரிசோதனை செய்து அனுமதி வழங்கியது?'' என்றார் ஓர் அதிகாரி.

''ம்...... ம்......'' என்றார். ''கடுமுடுக்கு'' அதிகாரி.

''நல்லது. இந்த அம்மாவின் பெட்டியில் ஐந்து லட்சம் பெறுமதியான இரத்தினபுரிக் கற்கள். சட்டப்படி உங்களையும் இந்த அம்மாவையும் கைது செய்கிறோம்'' என்றார் அந்த உயர் அதிகாரி.

இந்த நேரம் மாயவன் வந்து தன் அலுமினியப் பெட்டியை திறந்து காட்டினான். அந்தப் பெட்டியை யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை. பெட்டியைப் பூட்டிவிட்டான் மாயவன். அவனுடைய கையிலே ஏதோ இருந்தது. ஏதோ மூக்குப் பொடியை வைத்திருப்பது போல இருந்தது.

''பிரயாணிகள் எல்லோரும் உள்ளே வரலாம்'' என ஒலி பெருக்கி அலறியது.

''சாமி! துரை! வணக்கம். போகிறேன். வரமாட்டேன் ஐயா! உங்கள் தங்க முகத்தையோ இந்தப் பொன்னான பூமியையோ நான் இனிக் காண முடியாது. நான் இறந்தால் என் சாம்பலைக் கடலிலே போடுவார்கள், அது தமிழ் நாட்டிலே கரைந்து இந் நாட்டிற்கும் வரும் தானே சாமி. இந்த நாட்டு மண்ணைக் கொண்டு போக முடியவில்லை. இதோ! சாமி! இந்த இரண்டு விரலுக்குள் அடங்கிய மண்ணை வாயிலே போட்டுக் கொள்கிறேன்.''

மண்ணை உண்ட மாயவனைப் பற்றிப் புராணத்தில் எங்கோ படித்திருக்கிறேன், இங்கே மாயவன் என்முன் மண்ணை உண்டுவிட்டான் கல்லாய்ப் போய் நின்றேன்.

''ஐயா! போகலாம் தானே?'' என்றான் என்மோட்டார் வண்டிச் சாரதி.

''ம்......'' என்றேன். எல்லோரும் போகவேண்டியவர்கள் தானே என்று என்மனம் கூறியது.

(யாவும் கற்பனை)

## கடந்தவாரக் கதை

மாவை பாரதியின் ''துர்க்கையின் மாருத புன்னகை'' படித்தேன். ஜாதிப் பாகுபாடு என்பது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட ஒன்று. நாம் ஜாதியிலே...... அந்தஸ்திலே ...... உயர்ந்துவிட்டோம். என்று மார்பு தட்டும் போலியான மோகம்கொண்ட சித்திராவின் பெற்றவர் போன்றோரின் மனமும் எண்ணங்களும் தான் உண்மையிலேயே கீழ்ச்சாதி. என்றாலும் விதி யாரையும் விடுவதில்லை...... கதையில் இளையோடும் அருமையான கரு இது. ''ஆடு வெட்டுறவன்ர கடையில் கணக்கப்பிள்ளையாகவும் - உதவியாகவும் நிக்கிற அப்புவுக்கு பிள்ளை நான் அது பாவம்! இறைச்சி வாங்கித் திண்டால் பாவமில்லையே.........! இது என்ன அறியாமை..........!'' இப்படி பல இடங்களில் ஆசிரியையின் அனுபவ முத்திரைகள் ஆழமாய் பதிக்கப்பட்டுள்ளன. மண் கலாச்சாரத்துடன் நடையும் தளராது நிற்கின்றது.

— கலைச்செல்வி
மண்டைதீவு.

## உண்மைச் சிறுகதையே

கடந்தவார வெளியீட்டில் வெளியான ''துர்க்கையின் மாருத புன்னகை'' என்ற சிறுகதை சிறந்ததாக இருந்தது. அக்கதையை உண்மைச் சம்பவங்களை மையமாகக் கொண்டு எழுதிய மாவை பாரதிக்கு என் பாராட்டு. நவராத்திரி காலத்தில் இக்கதையை எழுதியமைக்கும் பிரசுரித்த ஈழநாட்டிற்கும் எனது பாராட்டுக்கள். இளம் எழுத்தாளர்கட்கு 'ஈழநாடு' கொடுத்து வரும் ஆதரவிற்கும் நன்றி.

க. சிவசங்கரநாதன்
தெய்வங்கேணி வீதி,
சரசாலை.

நண்பன்: எத்தனையாவது தடவையாக பெண் பார்க்கப் போகிறாய்?

மற்றவன்: பத்தாவது தடவையாக.

நண்பன்: அட ஒருத்தியும் உனக்குத் தோதாக அமையவில்லையா?

மற்றவன்: சை! ஒருத்திக்காவது நான் தோதாக அமைய வேண்டுமே!

ஜெனி லூட்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நகைச்சுவைக் கட்டுரை

# கடியெறும்பு குடியிருப்பின் மீது எதிரிகள் படையெடுப்பு!

அது, கடியெறும்புகள் குடியிருக்கும் பிரதேசம் என்பது சொல்லாமல் தெரியவேண்டிய ஒன்று. அதற்காகச் சாதாரணமாக மேலெழுந்தவாரியாகப் பார்வையைச் செலுத்தினால் அக்குடியிருப்பு புலப்படும் என்பதல்ல. காரணம் காயப்போடப்பட்ட விறகுக் கும்பல் ஒன்றுக்குக் கீழே இருந்ததுதான். மாரிகாலம் ஆரம்பமாகவிருந்தது. அது ஒரு மாலை நேரம். மேற்கத்திய வானில் பகலவன் தன் பகல் வேலைக் களையாறச் செல்கிறான். இருட்ட ஆரம்பித்தது. அன்றிரவு மழை பெய்யுமென்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன. மேகக் கூட்டங்கள் அணிவகுத்துச் சென்றன. இடிமுழக்கம் அடிக்கடி கேட்டது.

> எறும்பு நாட்டின் 'ரடார்' நிலையங்கள் அபாய ஓசை எழுப்பின. கம்பியில்லாத் தந்தி மூலம் சகல பாதுகாப்புப் பிரிவுகளும் போருக்குத் தயாராகும்படி அறிவிக்கப்பட்டது.
>
> எதிர்பார்ப்பு வீணாகவில்லை. சில நிமிடங்களுக்கு முன் தாக்குதலுக்குள்ளானவர் அலவாங்கு மண்ணெண்ணெய், டி. டி. ரி.-தீப்பெட்டி சகிதம் அங்கு எதிர்த்தாக்குதல் நடத்துவதற்காக வந்து சேர்ந்தார்.

### எல்லையில் ஆக்கிரமிப்பு

மழை வந்தால் விறகுகள் நனையுமே என்பதால் ஒருவர் அவற்றைப் பொறுக்குகிறார். எறும்புக் குடியிருப்பின் எல்லைப் பகுதியில் சற்று மிதித்தும்விட்டார்.

குடியிருப்புப் பகுதியின் எல்லைப் பந்தோபஸ்து எறும்புத் துருப்பினர் பதில் தாக்குதல் நடத்தினர். இப்பதில் தாக்குதலைச் சிறிதும் எதிர்பார்க்க

ஆர். எம். கிருபாகரன்

வில்லை. சமாளிக்கமுடியாதவராய், எடுத்த விறகையும் போட்டுவிட்டுக் குனிந்து காலைத் தடவியபடி இரண்டு அடி நகர்ந்தார். கால் மிதித்த இடத்திலும் மறுபடி அதே பதிலடிதான். விறகு விழுந்த இடத்திலுள்ள துருப்பினர் உஷாராகிவிட்டனர். அவர்களாலும் மூர்க்கமாகத்தாக்கப்பட்டார். முடுக்கிவிடப்பட்ட வீரர்களின் பதிலடியல்லவா? துடிதுடித்துப் போய்விட்டார். இந்த ஆக்கிரமிப்பும், பதிலடியும் பற்றிய செய்தி சகல படைத்தளங்களுக்கும் பரவிவிட்டது.

வலி ஒருபுறம்; கோபம் ஒரு புறம். அவரால் நிலையாக நிற்கமுடியவில்லை. அப்பால் குதித்துச் சென்று, காலில் நிலைகொண்டு தாக்கிய வீரர்களை அப்புறப்படுத்தினார். அதாவது தன் கைப்படையினால், கால் பகுதியை மீட்டுத் தன் தலைமைநிலையத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார். இருப்பினும் இடையிடையே வலிக்கவும் செய்தது. கோபம் தணியவில்லைப் போலும். கையில் அகப்பட்ட தடியொன்றினால் விறகுக் கட்டைப் புரட்டிவிட்டார். அப்போதுதான் எறும்புக் குடியிருப்பான 'எறும்புத் தேசம்' தெளிவாகத் தெரிந்தது. அவரின் முகத்தில் ஓர் அசட்டுச் சிரிப்பு அட்டகாசமாய்த் தெரிந்தது. ஏதோ பெரிய இராணுவ இரகசியங்களைக் கண்டுபிடித்துவிட்டவரின் முகம்போல் அவர் முகம் மாறியது. வீட்டுப் பக்கமாக விரைந்தார். "மறுபடி வந்து இந்த எறும்பு நாட்டையே நிர்மூலமாக்குகிறேன் பார்" என்று கூறுவதுபோலிருந்தது அவரின் நடைவேகம்.

ஈராக்-ஈரான் யுத்தமும், ஆரம்பத்தில் ஒரு நீரிணைப் பகுதியில் சிறு எல்லைச் சண்டையாக உருவெடுத்து இறுதியில் உக்கிரமான சண்டையாக மாறிவிட்டது. மேற்படி இரு நாடுகளும் அதைப் பெரிய யுத்தமாகவே மாற்றிவிட்டன. அதுபோல்தான் என்னவோ எறும்பு நாடு, அதை ஒரு பெரிய யுத்தமாகவே பிரகடனஞ் செய்தது. சகல படைகளும் உஷார்நிலையில் வைக்கப்பட்டனர். எந்த நேரத்திலும் எதிரிகள் நடத்தும் எந்தவொரு திடீர்த் தாக்குதலையும் சமாளிக்கத் தயாராகுமாறு இராணுவத் தலைமைப்பீடம் துருப்புக்களைப் பணித்தது. விறகின் அடிப் பகுதியில் உலாவிய பல வீரர்கள் விறகு புரட்டப்பட்டதால் மேற்பகுதிக்கு மாற்றப்பட்டனர். இப்'புரட்சி'யின் போது துருப்பினர் சிலர் ஆங்காங்கே உதிர்ந்து விறகினுள் விழுந்தனர். அவர்களும் அந்தந்த இடங்களிலேயே ரோந்துக் காவல்புரியுமாறு கேட்கப்பட்டனர்.

### மாரிகாலத்துக்கு ஏற்பாடு

மாரிகாலம் ஆரம்பமாக இருப்பதால் படைகளுக்கு உணவு சேகரிக்கும்பணி துரிதமாக மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தது. அயலிற் கிடைத்த உணவுகள், அத்தியாவசியப் பண்டங்கள் அனைத்தும் எறும்பு நாட்டின் வடக்குப் பக்கத்திலுள்ள இராணுவக் களஞ்சியத்தில் சேகரிக்கப்பட்டன. இதற்கு இராணுவ வாகனங்களே பயன்படுத்தப்பட்டிருந்தன. இப்பணியில் ஈடுபட்டிருந்த வீரர்கள்கூடப் "போர்ப் பிரகடனத்தால் உடனடியாகப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு பணிக்கப்பட்டனர். குடியிருப்புள்ள பகுதி மட்டுமல்ல; சூழவுள்ள இடமெல்லாம் கண்ணுக்கெட்டிய தூரம் வரை இராணுவ மயமாகவே காட்சியளித்தது. எறும்புநாட்டினர், பிறந்த நாட்டை உயிரினும் மேலாய் மதிப்பவர்கள். நாட்டுப்பற்று அதிகம் உள்ளவர்கள். கடமை தவறாத கண்ணியவான்கள் மட்டுமல்ல; சுறுசுறுப்பின் சூத்திரதாரிகளுங்கூட. குடியிருப்பின் மேற்பகுதியில் இராணுவ நடவடிக்கை ஒருபுறமிருக்க, கீழ்ப் பகுதியில் எறும்பு இராணுவத்தினரின் "முட்டை"ப் பகுதிக்குப் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டது. முட்டைகளில் அவை பொரித்தால் நாளைய எறும்புநாட்டின் குடிமக்கள் அல்லவா அவர்கள், கடமையிலுள்ள இராணுவத்தினர், தம் முட்டைகளைக் கூடப் பார்க்க அனுமதி மறுக்கப்பட்டிருந்தனர். கடமைக்குக் குறுக்கே பாசம் இருக்கக் கூடாதென்ற உண்மையை எறும்புகளும் அறிந்துள்ளனரா?

திடீரென எறும்பு நாட்டு "ராடார்" நிலையங்களில் அபாய ஒலி எழுந்தது. இராணுவத் தளபாடங்களுடன் எதிரிகள் படையெடுத்து வருகின்றனர் என்பதற்கான எச்சரிக்கை ஒலி. அது. "கம்பியில்லாத் தந்தி" மூலம் சகல பாதுகாப்புப் படைப் பிரிவுகளும் போருக்குத் தயாராகுமாறு அறிவித்தது இராணுவத் தலைமையகம். அவர்களின் எதிர்பார்ப்பு வீணாகவில்லை. சிலநிமிடங்களுக்குமுன் பதில் தாக்குதல்களுக்குள்ளானவரும் கூடவே வேறு இருவரும் அலவாங்கு, மண்ணெண்ணை, டி. டி. ரி. மருந்து, தீப்பெட்டி சகிதம் முப்படை உதவி கிடைத்ததுபோல எறும்பு தேசத்தை முற்றுகையிட்டனர். நெருங்கி நெருங்கிவந்தபோது அயற்பகுதி எறும்புத் துருப்பினரின் திடீர்த்தாக்குதலுக்கு உள்ளாகினர், அதாவது இருட்டில் இராணுவ நிலைமை தெளிவாகத் தெரியாததால் மிதித்துவிட்டார்கள். இத்திடீர்த் தாக்குதலைச் சமாளிக்க மூவரும் களத்திலே துள்ளினார்கள். அப்போது காலில் மிதிபட்ட நூற்றுக்கணக்கான எறும்புப்படையினர் நசுங்கி மாண்டனர்.

"பிரங்கி"த்தாக்குதலோ அல்லது "டாங்கி"த் தாக்குதலோ தெரியாது. சூழவுள்ள பகுதியெங்கும் புழுதி பறந்தது. கடுஞ்சமர் ஆரம்பமாகியது. எங்கும் போர் முரசம் கேட்டது. எதிரிகளின் மூர்க்கத்தாக்குதலால் எறும்பினர் மடிவதையும், மரண ஓலமிடுவதையும் எதிரித் துருப்பினர் இடையிடையே "தொம் தொம்" என்று ஒடும் ஓசைகளும் மாறிமாறிக் கேட்டன. எறும்பினர் ஆக்கிரமித்திருந்த "சூழவுள்ள பகுதி"யை எதிரிகள் கைப்பற்றினர். இதற்கு அவர்களின் கவசவாகனப் படையினரே பெரும் பங்கு வகித்ததாக செய்திகள்கூறின. அங்கெல்லாம் எதிரிகளின் தேசியக்கொடிகள் பறக்கவிடப்பட்டன. எதிரிகள் முன்னேறத்தொடங்கினர். எறும்புத் துருப்பினர் சற்றுப் பின் வாங்கினர். ஆயினும் தீரமுடன் எதிர்த்துப் போரிட்டனர், எதிரிகளின் விமானப் படையும் போரிற்குதித்தது. அப்போது குடியிருப்புப் பகுதிகளில் அலவாங்கின்போர் குத்

(9-ம் பக்கம் பார்க்க)

பொன் விளை... பூமி... இஷ்டதேவ...

ஆலயத்திலும் சரி, வீட்டிலும் சரி எமது கிராமிய மக்கள் தெய்வங்களை...
பான நல் வாழ்வைத் தான் ஒளியாகவும், மழையாகவும், காற்...
வேண்டுதல்களைப் பூர்த்தி செய்கிறது தெய்வம் பூமித்தாயை ந...
பூமியே மிகப்பெரிய சொத்தாகும். பொன் விளையும் பூமியை நம்பி...
...களுக்கு ஒரு முக்கிய செய்தி. ஒவ்வொரு விவசாயின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட...
தங்கள மண்ணின் வளத்தை முழுமையாகப் பெறவேண்டுமென ஆவல் கொண்டுள்...
பூர்த்திசெய்ய வழி செய்யும் செய்தியே அது வாகும். இஷ்டதே...
பயனையும் பெற வழி செய்திருக்கின்றன.

நீண்ட கால ஆராய்ச்சியின் பயனாக, விவசாயியின் நெடு நாள் ஆவலைப் பூர்த்திசெய்ய, வரப் பிரசாதமாக இன்று கிடைக்கிறது.

ஹினோமோட்டோ

"ஹினோ மோட்டோ"
டிராக்டர்கள் பல நாள் முயற்சி யின் பலா பலன் தான்
ஹினோ மோட்டோ. எமது நாட்டின் செழிப்புக்கு ஒரு உற்ற துணை
'ஹினோ மோட்டோ' டிராக்டர்கள் எங்கும்
எப்பொழுதும் எமது தேவைகளை நிறைவேற்றும் வகையில்
தயாரிக்கப்பட்டுள்ளன மஹா இலுப்பல்லமவிலுள்ள விவசாய உபகரண
பரீட்சார்த்த நிலையத்தில் பரீட்சிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுள்ளது
'ஹினோ மோட்டோ இதற்காகச் செலவிடும் 95,000 ரூபா ஒரு
விவசாயியின வாழ்வில் புதுமலர்ச்சியை நிச்சயமாக வழங்கும்.

E 280
31 ஹோர்ஸ் பவர் ரூபா. 95,000/-

விற்பனை, சேவை, உதிரிப்பாகங்கள் ஆகியவற்றிற்கு
ஏக முகவர்கள்:
கொன்சொலி டேற்றெட் எஞ்ஜினியரிங் கொம்பனி லிமிட்...
101 ஷ்பூரோட் கொழும்பு 2. தொலைபேசி: 35009, 35164

ZENITH



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச்சியப்பர் உவமை நயம்

# தீங்கு யாவர்க்கும் செய்திடாதவர் தாங்கள் துன்புறுர்

வ. குகசர்மா

...ரர்கள் மற்றவர்க்கு தீ... செய்வதையே நோக்க மா... கொண்டவர்கள். இரக் கம... ாத நெஞ்சினர். தர்ம வழி... தில்லாதவர்கள் எனக் கந்புர... ாணம் வர்ணிக்கிறது. இனி மறுபக்கமாகத் திருப் பிப்பா...ர்த்தால் நமது வாழ்க் கைக்குப் பிரயோசனமாகும். பிறருக்குத் தீங்குசெய்வதையே நோக்கமாகக் கொண்டவர்கள் இரக்கமற்ற நெஞ்சினர் இவை முதலாய தீய குணங்களையு டையவர்கள் மனித உருவில் இருந்தாலும் அவர்கள் அசுரர் களே. தமக்குத் துன்பம் வர வேண்டும் என்னும் நோக்க முடையவர்கள் தான் பிறருக்கு துன்பம்] செய்வார்கள். இந்த உண்மை பலராலும் உணரப் படுவதில்லை. உணர்ந்து விட் டால் உலகில் துன்பமேது. கச்சியப்பர் இந்திராணி அசமு கிக்குக் கூறும் அறிவுறுத்தலாக இதனைத் தெளிவாகக் கூறுகி ருர்.

"தீங்கு யாவர்க்கும் செய்தி
டாதவர்
தாங்கள் துன்புறுர் தமக்கு
வேண்டினேர்
ஆங்கெவர்க்குமுன் அல்லல்
செய்வரால்
ஈங்கு நீயிவை எண்ண
லாய்கொலோ"

இந்த உண்மையை கச்சியப் பர் பல இடங்களிலும் வற்பு றுத்திக்கூறுகிருர். மலரம்புகளை இறைவன் மேலெய்த மன்ம தன் சிவபெருமான் நெற்றிக் கண் அக்கினியால் சாம்பராகி விட்டான். அவனது மனைவி இரதி அந்தச் சோகநிலையிலும் தான் ஏதோ தீவினை செய்தி ருக்க வேண்டும் ஆசையால் தான் விதவையாகும் கொடிய தண்டனை தனக்குக் கிடைத் தது என நினைக்கிருள்.

"என்னபாவம் செய்தேனே
எவ் ரால்வார்
தமக்கென்ன
இடர் செய்தேனே
முன்னையுள விதிப்பயனை
யறிவேனே
இப்படியே முடிந்ததையோ"

என இரதி புலம்பியதாகக் கந்த புராணம் கூறும்.

"பற்றித்தொடரும் இரு வினைப் பாவ புண்ணியமே" என்ருர் பட்டினத்தடிகள். இராம பிரானிடத்திலே விசு வாமித்திர முனிவர் அளித்த தேவப் படைக்கலங்களெல் லாம்வந்து சேர்ந்ததைக் கூறப் போந்த கம்பர் "தேறிய" மனத்தான் செய்த நல்வினைப் பயன்களெல்லாம்

மாறிய பிறப்பிற் தேடி வரு
வபோல் வந்த வன்றே"

என்ற சிறந்த உவமை மூலம் கூறுகிருர். இதனைக் கச்சியப் பர் மிகத்தெளிவாக விளக்கு கிருர். தேவாமிர்தம் மிகச் சுவையுடையது. நஞ்சோ மிக்க கசப்புடையது. இது ஏன் தேவாமிர்தம் நன்மை செய்யும் தன்மையுடையது. புண்ணியம் போன்றது. நஞ்சு இதற்கு மாருன தன்மையுடை யது. இவற்றின் சுவை போன் றது. மக்களுக்கு வரும் தீமை யும் நன்மையும்.

"தீங்குவந்தடையு மாறும்
நன்மைதான் சேரு மாறும்
தாங்கள்செய் வினையினலே
தத்தமக் காய அல்லால்
ஆங்கவை பிறரால் வாரா
அமுதநஞ் சிரண்டினுக்கும்
ஓங்கிய சுவையின் பேதம்
உதவினுர் சிலருமுண்டோ"


ஒருவருக்கு புகழ் இருக்க லாம் மிக்க செல்வம் இருக்க லாம், வெற்றிவீரம் யாவும் இருக்கலாம். ஆனுல் அவை யெல்லாம் மெலியாருக்குத் தீங்கு செய்தல் முதலிய பாவங்களால்அழிந்துபோகும். அந்தப் பாவங்கள் இவற்றை யெல்லாம் மறைத்துவிடும். சூர னுடைய அரசியல் பட்டினமா கிய வீரமகேந்திர புரத்தில் வறுமையில்லை. மூப்பு, பிணி, மரணம் என்பனவற்யையும் காணவில்லை என அவர் தவ வலிமையை வியக்கும் வீரவாகு தேவர். வேறு நல்ல காரியங் கள் சிலவற்றைக் காணுமல் கவலையடைகிருர். தருமம், உண்மை, அன்பு ஆகிய மூன்று நல்ல விடயங்களைக் காண வில்லை. அவை இல்லாமை இவற்றிற்கு எதிரான பாவச் செய்கை இவர்களுடையபுகழ் செல்வம் இவற்றை அழித்து விடப்போதியது. இந்தச்சிந்த னையுடன் வீரவாகு தேவர் மேலும் பார்க்கிருர்.


அதோ ஒரு உயரமான மாளிகை. அது வெண்படிகத் தால் செய்யப்பெற்று ஒளிவீசி நிற்கின்றது. ஆனுல் அந்த ஒளி சற்று நேரத்தில் மறைந்து விடுகின்றது. அதற்குக் கார ணம் அந்த மாடத்தில் வசிக் கும் அசுரப் பெண்கள் தங்கள் கூந்தலுக்கு அகிற்புகையிடுகி ருர்கள். அந்த அகிற்புகைதான் அந்த மாடத்தின் ஒளியை மறைத்து விடுகிறது. மாடம், புகழ் செல்வம் முதலியவற்றை யும், புகைபாவத்தையும் குறிப் பிடுகின்றன.

",மேலுலாவிய படிகமா
ளிகைசில மின்ஞர்
மாலை தாழ்குழற் கிடுமகி
லாவியான் மறைவ
சில நீங்கிய அவுணர்தஞ்
சீர்த்திகள் அனைத்தும்
ஏல வேயவர் பவத்தினுள்
ஒடுங்குமா றென்ன"


...ளையும்
...மியின்
...தவதை

...தய்வங்களை வேண்டுவது பாதுகாப் ...ும், காற்ருகவும் இயங்கி மக்களின் ...தாயை நம்பி வாழும் விவசாயிக்கு ...யை நம்பியிருக்கும் எமது கிராமிய ...வரப்பட வேண்டிய முக்கிய செய்தி ...ாண்டுள்ள அவர்களின் ஆசையைப் ...இஷ்டதேவதைகள் பூமியின் முழுப்




விசேட மிதப்புச் சக்கரங்கள்...





நீர் தாக சற்றும் புகாத பிரேக்குகளும் ஊிளக்கும் ஈரக் காணியை உழுதற் குரியவை


சுழல் கருவி நெல் வயலுக்கேற்ற அரிவாள் அலகுகள் அல்லது மேட்டு நிலத்துக்கேற்ற உளி முனைகள் கொண்டது.





பிற இலகு பார ட்ராக்டர்களையோ, எரு மைகளையோ கூடச் சங்கடப்படுத்தும் சக்தி நிலத்தில் இயக்குதற்குரியன.





ஸ்பிரிங் வாருகோலியும் மட்டப்படுத்தும் அலகும் நிலத்தை இறுதியாக ஒப்புர வாக்குதற்குரியது.

எந்த ரகத் தராதர ட்ரெயிலரையும் இழுக்கக் கூடியது

எரிபொருட் சிக்கனம் ●
மண் வளம் பாதுகாப்பு|பாசன நீர் ●
கீழ் மண் பாதுகாப்பு ●

2 சிலிண்டர் டீசல் எஞ்சின் ●
விருப்பமான மேலதிக உறுப்பு கள் உண்டு ●
நீண்ட கால தொல்லையற்ற பாவனைக்குரியது ●
15 வேகம் 12 முன்புறம் 3 பின்புறம் ●

...லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இந்திய சுதந்திர வீரர் வரிசை

# சேலம் சி. விஜயராகவாச்சாரியார்

**வி. ரவிச்சந்திரன்**

தாய்த்திருநாட்டின்விடுதலைக்காகப் பாடுபட்டோர் பலராவர். பிறந்த பொன்னாடு அந்நியர் ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடப்பதைக் கண்டு அவர்கள் உள்ளம் துடித்தனர். பாரத அன்னையின் விலங்கினை நீக்கிட எத்தகைய தியாகத்திற்கும் சித்தமாயிருந்தனர். அத்தகைய தியாகச் செம்மல்களுள் குறிப்பிடத்தக்கவர் சேலம் சி. விஜயராகவாச்சாரியார் ஆவார், இவர் சிறந்த செயல்வீரர். நாட்டுப்பற்றிலே வீட்டுப்பற்றை எல்லாம் துறந்த தியாகச்சுடர். வறியோர்க்கு வரையாது வழங்கிய வள்ளல். காங்கிரஸ் பேரவை தோன்றுவதற்கு முன்னரே இவர் நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டார். ஆங்கிலேயரால் சிறைத்தண்டனை அளிக்கப்பெற்றுப் பல துன்பங்களை அனுபவித்தார்.

விஜயராகவாச்சாரியார் 1852ம் ஆண்டு யூன்மாதம் 18ம் திகதி தமிழ்நாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த 'பொன்விளைந்த களத்தூர்' என்ற ஊரில் பிறந்தார். இவருடைய தந்தை சடகோபாச்சாரியார். தாயார் கனகவல்லி அம்மையார்.

இவர் தந்தை புரோகிதராகப் பணியாற்றி வந்தகாரணத்தினால் தன் மகனை வேத பாடசாலையில் சேர்த்து வேத பாடங்களைக் கற்றுத் தேர்ச்சியடையும்படி செய்தார். விஜயராகவாச்சாரியார் தமது பன்னிரண்டாம் வயதில் ஆங்கிலக் கல்வி பயில சென்னை பச்சையப்பன் பள்ளியில் சேர்ந்தார். பள்ளிக்கல்வியை முடித்த இவர் சென்னை மாநிலக்கல்லூரியில் சேர்ந்து 1875ம் ஆண்டு B. A. பட்டம் பெற்றார், இத்தேர்வில் சென்னை மாநிலத்திலேயே இரண்டாவதாகத் தேர்ச்சி பெற்றார்.

சென்னை - மங்களூர்- சேலம் ஆகிய இடங்களில் அரசினர் கல்லூரிகளில் விரிவுரையாளராகச் சில ஆண்டுகள் பணியாற்றிய இவர் கல்லூரியில் சேர்ந்து படிக்காமலேயே தாமே கற்று சட்டப்படிப்பை படித்து முடித்தார். 1881ம் ஆண்டு சேலத்தில் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டார். வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்ட விஜயராகவாச்சாரியார் சில ஆண்டுகளிலேயே அத்துறையில் சிறந்து விளங்கினார். இவர் 1882ம் ஆண்டு சேலம் நகராட்சி மன்றத்தின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவரது வாதாடும் திறமையை வியந்து மக்கள் இவரைச் 'சேலத்து வீரர்' என்றும் தென்னிந்தியச் சிங்கம் என்றும் பாராட்டினர்.

### காங்கிரஸ் தோற்றம்

1885ம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியானது ஏ. ஓ. ஹியூம் என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட போது அவருக்குப் பேருதவியாக விஜயராகவாச்சாரியார் விளங்கினார். அத்துடன் பம்பாயில் நடந்த காங்கிரஸ்பேரவையின் முதல்கூட்டத்தில் இவர் கலந்து கொண்டார். 1887ம் ஆண்டு காங்கிரஸ் பேரவையின் அமைப்பை நிர்ணயித்த போது அதற்காக ஏற்படுத்தப்பட்ட குழுவின் உறுப்பினராகப் பணியாற்றினார். அதனைத் தொடர்ந்து விஜயராகவாச்சாரியாரின் வாழ்க்கை நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்காகவே அர்ப்பணிக்கப்பட்டது.

### தலைவர்களுடன் உறவு

அக்கால விடுதலை வீரர்களாக விளங்கிய தாதாபாய் நௌரோஜி - பாலகங்காதர திலகர் - கோபாலகிருஷ்ண கோகலே - லாலாலஜபதிராய்- ராஜாஜி - மோதிலால்நேரு ஆகியோருடன் இவர் நெருங்கிய உறவுகொண்டு வாழ்ந்தார். இத்தலைவர்களாலும் காங்கிரஸ் பேரவையாலும் இவரது ஆலோசனைகள் பெருமதிப்புடன் ஏற்றுக்கொள்ளப்பட்டன, காங்கிரஸ் கொள்கைப் பரப்புக் குழுவின் உறுப்பினராக இருந்து காங்கிரஸின் லட்சியங்களை நாட்டு மக்களுக்கு எடுத்துக்கூறும் அரும் பணியை மேற்கொண்டார்.

மகாத்மாகாந்தி அவர்கள் தென்னாபிரிக்காவில் இருந்து திரும்பிவந்து நாட்டுச் சுதந்திரப்போரில் பங்குகொண்ட போது விஜயராகவாச்சாரியார் அவருக்கு உறுதுணையாக விளங்கினார். காந்தியடிகள் கொண்டுவந்த ஒத்துழையாமை இயக்கத்திற்கு முழு மனதுடன் ஆதரவு தந்தார். காந்தியடிகள் தமது சுயசரிதையில் ஒத்துழையாமை இயக்கத்தில் விஜயராகவாச்சாரியின் பங்கினைப் பாராட்டிப் புகழ்ந்துள்ளார். காந்தியடிகளின் வன்முறை தவிர்ந்த போராட்டக்கொள்கைகளை காங்கிரசில் இருந்த சில தீவிரவாதிகள் ஏற்காதபோது, அவர்கள் மனதை மாற்றி அக்கொள்கைகளை ஏற்று நடக்கும்படி செய்த பெருமை விஜயராகவாச்சாரியாரையே சாரும்.

தமது ஒப்பற்ற பணிகளின் காரணமாக விஜயராகவாச்சாரியார் 1920ம் ஆண்டுகூடிய காங்கிரஸ் பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1928ம் ஆண்டு ஆங்கிலேயரால் அனுப்பப்பட்ட சைமன் குழுவுடன் ஒத்துழைக்க இந்திய தேசிய காங்கிரஸ் மறுத்துவிட்டது. அக்குழுவில் இந்தியர் எவரும் உறுப்பினராகச் சேர்க்கப்படவில்லை என்பதற்காக எதிர்ப்புத் தெரிவித்தோரில் விஜயராகவாச்சாரியார் முதன்மையாக விளங்கினார்.

இவர் சேலம் நகராட்சி மன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது முதல் தொடர்ந்து நாட்டுக்குச் சேவை செய்யும் பணியில் ஈடுபட்டார். நாட்டுவிடுதலைக்கு மட்டுமின்றி பல்வேறு துறைகளிலும் தம் ஆக்கப்பணிகளைச் செம்மையுறச் செய்தார். 1895ம் ஆண்டு சென்னைமாநில மேல்சபைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1901ம் ஆண்டு வரை பணியாற்றினார் 1913ம் ஆண்டு முதல் 1916ம் ஆண்டுவரை டில்லி மத்திய சட்டமன்றத்தின் உறுப்பினராக இருந்தார். அக்காலத்தில் விஜயராகவாச்சாரியார் சட்டமன்றங்களில் சமூகசீர்திருத்தச் சட்டங்களைக்கொண்டுவருவதற்குப் பேராதரவு காட்டிவந்தார்.

இவரது வாழ்க்கையின் பெரும்பகுதி ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்ப்பதிலும் நாட்டின் சமுதாயப் பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவதிலுமே கழிந்தது. ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை இவர் எதிர்த்தபோதிலும் ஆங்கிலேயர் பலருடன் நெருங்கிய நட்புடையவராகவே இருந்துள்ளார். இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த ரிப்பன் பிரபு - கர்சன் பிரபு ஆகியோருடனும். இந்திய தேசிய காங்கிரசைத் தோற்றுவித்த ஏ. ஓ. ஹியூம் அவர்களுடனும் அன்னி பெசண்டு அம்மையாருடனும் நட்புறவு கொண்டிருந்தார். விஜயராகவாச்சாரியார் நாட்டுப்பற்றுக்கொண்டவரேயன்றி இனவெறி கொண்டவர் அல்ல என்பதற்கு மேற்கூறிய தொன்றே சான்றாகும்.

92 ஆண்டுகாலம் இவ்வுலகில் பயனுற வாழ்ந்த விஜயராகவாச்சாரியார் 1944ம் ஆண்டு ஏப்ரல் 19ம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

''வையத்து வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''

என்ற குறள்மொழிக்கேற்ப விஜயராகவாச்சாரியார் மனித தெய்வமாகவே பலராலும் போற்றப்படுகிறார். இவரது மறைவுக்குப் பின் இவரது பெயரால் சேலத்தில் ஏற்படுத்

(9-ம் பக்கம் பார்க்க)


## டியுறேல்

## அப்பிள் பழச்சுவையுள்ள, இரும்புச்சத்து நிறைந்த, பிள்ளைகளுக்கான விற்றமின் பாணி.






பூச்சிக் கோளாறு, உங்கள் பிள்ளைகளுக்குப் பெரும் சோகையை உண்டாக்கி கடும் பலவீனத்தை ஏற்படுத்தி சக்தியை இழக்கச் செய்கிறது.

இரும்புச் சத்தும், பி கொம்பிளெக்சும் கொண்ட பிள்ளைகளுக்கான டியுறேல், இரத்த விருத்தியை அதிகரிக்கச் செய்து, போஷாக்குக் குறைவு, பலவீனம் ஆகியவற்றை எதிர்க்கிறது.

பிள்ளைகளுக்கான டியுறேல் பாணி மதுசாரமற்றது. அத்துடன் உங்கள் பிள்ளைகள் பெரிதும் விரும்பும் அப்பிள் பழச் சுவையுடையது.

உங்களது பிள்ளை களைப்புற்று, சோர்வடைந்திருக்கும் போது மீண்டும் மெருகூட்டி சுறுசுறுப்பாக்க சக்திச் செறிவும், விற்றமின்களும் கொண்ட பிள்ளைகளுக்கேயுரிய டியுறேல் கொடுங்கள். அதுவே பலவீனத்தைப் பறக்கச் செய்கிறது....
அதுவே பலம் வழங்குகிறது.

**ஒவ்வொரு கரண்டி பிள்ளைகளுக்கான டியுறேலிலும் இரும்புச்சத்து நிரம்பியிருக்கிறது.**

Grant K & E 3254

- ரூ. 13/75


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவர் எழுதும் குறுநாவல்

# பூ நாகம்!

## இவர்

'பூ நாகம்' குறுநாவலின் முதல்பகுதியை வடகோவை வரதராஜன் சுவையாக ஆரம்பித்துக் கொடுக்க இரண்டாம்பகுதியைத் தொடர்கிறார் இன்னுமொரு இளைஞரான இ.இராஜமகேந்திரன்.

இவர் கோப்பாய் வடக்கில் நாவல்கட்டையில் வசிக்கிறார். நாவல் சிறுகதை ஆகிய துறைகளில் நல்ல ஆர்வமுள்ள இவர் நவீன நாடகத்துறையிலும் பெரும் ஈடுபாடுகொண்டவர். கோப்பாய்இராஜபாட் நாடகக் கழகத்தின் முக்கிய உறுப்பினராவார், தற்பொழுது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான மாணவராகக் கல்விபயின்று வருகின்றார்.

## (3)

## இராஜ மகேந்திரன்

சித்திரை மழை பொய்த்துவிட்டது. நெல்லறுத்துக் கொண்டு உழுது போட்ட பயறு வீடு திரும்பவில்லை. புற்கள் கருகி வயல் பாளம் வெடித்துக் கிடந்தது. வயல் வெளிகளில் கட்டிய மாடுகள் கீழே ஒன்றையும் கடிக்க முடியாமல் வானம்பார்த்துக் கத்தின. நாச்சிமார் கோயிலடித் தாழைகள் கூட பழத்துப் பொன்னிறம் பெற்றிருக்கின்றன.

சமீபத்திய ஆண்டுகளின் கோடை இதேபோன்ற ஏமாற்றங்களைத் தந்தே பழக்கமாகி விட்டதால் இந்த நாட்களில் சிங்கன் மாடுகளைக் கடற்கரைக்கு ஓட்டிச்சென்றுவிடுவான். இனிமேல் மழை பெய்தால் கூட இந்தப்பக்கத்தில் நடக்கும் உழவு, விதைப்புக் காரணமாக மாடுகளை நாச்சிமார் கோவிலடியில் விட இயலாது. மழைகூடி நெல்லும் வளர்ந்தால் பின் செம்பாட்டுப் பனையளுக்குள்தான் மேச்சல்.

சோளகம் வீசும் இந்தக் காலம் கடற்கரையில் வீசும் வெப்பக்காற்றும், வெய்யிலும் சிங்கனை உருக்குலைக்கத் தொடங்கியிருந்தன. இரவெல்லாம் அடித்துப்போட்டபடி தூக்கம் வரும்.

இன்றைக்கு அதிகாலை புழுதி மணத்துடன் சடசடவென்று மழை பெய்தது, ஒட்டைக் குடிசையூடு ஒழுக்குப்பட்ட பிறகே சிங்கன் எழுந்தான்.

நேரம் கணிசமாய் மூன்றுமணி இருக்கும். மழைபெய்ய வேணும். எல்லாத்துக்கும் நல்லது, வீடுதான் ஒழுகும். மாரிக்கு இன்னும் ஒழுகும். ஒரு சிரட்டை எடுத்து ஒழுக்குக்கு வைத்துவிட்டு தலைமாட்டில் புகையிலை எடுத்து நெட்டி கிழித்து சுருட்டி நெருப்பெட்டி தேடினான்.

''பாக்கியத்தின்ரை வெள்ளைச்சி அட்டமி நவமியோடை சண்டு போடும். இந்த மழைக்கை நனைஞ்சால் கூடாது. பாக்கியம் மாட்டில் நல்ல கவனம். நனையவிடமாட்டாள், அவள் யாரிலைதான் கவனமில்லை, என்னிலையும் நல்ல கவனம்தான், இந்தப் பாக்கியத்தின்ரை பார்வை என் மீது பட்டது நான் செய்த புண்ணியம், நாச்சிமார் புண்ணியம், அவவின்ரை வடிவுக்கு உங்கை ஒருத்தரும் முன்னாலை நிக்கமாட்டினம்.''

பாக்கியத்தின்ரை அழகுதான் சிங்கனுக்கும் பயம் தந்தது. 'இவ்வளவு வடிவான பொம்பிளையை எனக்குத் தருவினமே' என்று எண்ணவைத்தது. பாக்கியத்துக்கு அம்மா சரசு. அப்பா செல்லத்துரை நினைவாய் படம் என்லார்ஜ் செய்து பிரேம்போட்டு சின்ன வீட்டில் வாசலில் கடுதாசி மாலையுடன் காட்சி தருவதோடு சரி.

சரசுவின் வீட்டில் வெள்ளச்சி முதலான நாலு மாடுகள், பால். சாணம் என்று வாழ்க்கை ஓடியது. பாக்கியம் ஒரு பெண், நாலு அண்ணன்மார், கடையிலும், கராஜிலும், வெல்டிங்கும், கிளீனருமாக எறும்பு மண் காவின மாதிரி சொத்துச் சேர்த்தார்கள். சுகஜீவனம்.

இதனால் பெண்ணை நல்ல இடத்தில் வாழவைக்கிற துடிப்பு பொதுவானது. இந்தப் பட்டிக்காட்டு மாடு மேய்க்கும் சிறுவன் அன்றாடம் காய்ச்சி என்று பெயரெடுத்தவன், நாலு வீட்டில் சாப்பாட்டிற்கென்று போகிறவன், பெண் கேட்டால் என்ன நடக்கும். மூத்தவன் சோதியின் கொடுவாள் மீசை துடிக்காதோ?

அவனுடைய நம்பிக்கை சாசம்மாள் தன்னை மறுக்கமாட்டான் என்பதுதான், தற்செயலாய் மறுத்துவிட்டால் என்ன செய்வது? என்ன செய்யலாம்? பாக்கியம்தான் ஒரு வழிபண்ணவேணும்.

''அண்டைக்கு ஞானக்கா கண்ட பிறகு பாக்கியத்தை இன்னும் காணேல்லை. வெள்ளச்சி ஒழுங்காய் மேச்சலுக்கு வருகுது. ஞானக்காவும் அடிக்கடி தென்படுகிறா: மேலும் சாட்சியங்கள் தேடுறாவோ என்னவோ?

இந்த மனிசிக்கு வாய் பொல்லாதது. கண் சுடுகிற கண். புருஷன்சம்பாதிக்கிற நானூறு ரூபாய் அரசாங்கப் பணம் தனக்கும் பிள்ளைக்கும் போதாதெண்டு ஆடு வளர்க்கிறாள். இவளின் ஆடுகள் கம்பீரமானவை. நீண்ட கொம்புகளும் கனக்கும் பால் நிரம்பிய மடிகளுமாக எப்பொழுதும் மேச்சலுக்கு ஆடுகள் வரும்பொழுது குட்டிகள் இரண்டு என்றாலும் வரும். அவை கட்டப்படுவதில்லை. அக்கம் பக்கத்து வயல்கள் பயறின் பசும் தழைகளை ஆடுகள் கடிக்க, வயல்காரரின் திட்டுக்களை புன்னகையால் சமாளிக்கிற திறன் இவளுக்கு உண்டு.

ஆடு கட்டுவது, தண்ணி வைப்பது, அவிழ்ப்பது என்று மூன்றுநாலு தடவை வயல் வெளியை வலம்வருவாள். மிகுதி நேரத்தில் நல்லூரில் சின்னப்பரின்ரை மகளுக்குப் பின்னாலை போனவன் பற்றிய விமர்சனம் தொடங்கி நேற்றைக்கு வெறியிலை புண்ணியமூர்த்தி என்ன செய்தான் என்பது வரை வீடுவீடாக அலசுவாள். அது அவள் பொழுதுபோக்கு.

ஞானக்காவுக்கும் சிங்கனுக்கும் பகை இருந்தது. ஞானக்காவின்ரை ஆடுகள் சோமையரின் பயறு மேய்ந்த கதையைச் சோமையருக்கு அவன்தான் சொன்னானாம்.

''உனக்கு சிங்கப்பூரிலை இருந்து வாற பென்சன் காணாதெண்டே வயலுக்கை சாகிறாய்'' என்றும் ''கண்ட தேசமெல்லாம் உன்ரை வயல் கிடக்கேக்கை நான் வேறையெங்கை ஆடு கட்டுறதென்றும்'' ஞானக்கா சோமையரைக் கேளாக்கேள்வி கேட்டிருந்தாள்.

சோமையர் சளைக்காமல் ''புரியன்சம்பாதிக்கிறது காணாதெண்டே ஆடு வளர்க்கிறாய்'' என்று கேட்டிருக்கிறார். பிறகு விதானை, தண்டம் என்று அலைந்து..................

சோமையர் ஆள் லேசுப்பட்டவரில்லை.

எல்லாம் சிங்கன் வேலை என்று ஞானக்காவுக்கு சிங்கனில்கோபம். சிங்கனுக்குஆடும் ஒன்று. பயிரும் ஒன்று. இரண்டில் எதுக்கும் சேதம் ஆகக் கூடாது.

ஞானக்காவுக்கு சிங்கன் மேல் கோபம் இல்லையென்றால் மட்டும் அவள் வதந்தியைப் பரப்பமாட்டாள் என்பதில்லை. நல்ல அவல் கிடைத்தால் மெல்லாமல் விடலாமோ? ஒழுங்கையில் ஒவ்வொரு படலையிலும் ஞானக்கா நாலு நேர சமா வைத்து விஷயம் ஊரில் நாறிப்போயிருந்தது. த...க்குப் பின்னால் எல்லாரும் சிரிக்கிறார்கள் என்பது தெரியாமல் சிங்கன் விச்ராந்தியாய்த் திரிந்தான். ஆனால் ஞானக்காவின் கண்பட்டால் ஆபத்து [illegible] ர்ந்து பயந்தான்.

காலையில் மாடு கொண்டு போகிறபொழுது வழியில் ஞானக்கா வந்துகொண்டிருந்தா. அருகே வரும்போது ஒரு மரியாதைக்காக ''ஆடு கட்டிப்போட்டுவாறியளோ''? என்று இவன் கேட்டான். ஞானக்கா தலையசைப்பில் பதில் சொன்னாள். பிறகு ''வெள்ளச்சி எங்கை காணேல்லை'' என்று கேட்டாள்.

''அது கண்டு போடப் போகுது, அதுதான் கொண்டு வரல்லை.''

''என்ன அதுக்கிடையிலை, அண்டைக்குத்தானே நாச்சிமார் கோவிலடியிலை நாம்பனோடை கண்டனான். அதிலை வேப்பமரத்துக்குக்கீழை. ஒரு எட்டு ஒன்பது மாதமெண்டாலும் செல்லுமெண்டு நினைச்சன்.'' ஞானக்கா சொல்லிக் கொண்டே போனாள்

சிங்கன் அவள்பேச்சை இரைமீட்டான். ஏதோ புதிராயிருந்தது.

''என்ன அதுக்கிடையிலை?''

''ஒரு எட்டு ஒன்பது மாதமாதல் செல்லுமெண்டல்லோ நினைச்சன்''

''அண்டைக்குத்தானே கண்டனான். நாச்சிமார் கோவிலடி வேம்புக்குக்கீழை''

அண்டைக்கு வேம்புக்குக் கீழை வெள்ளச்சி எங்கை நிண்டது. நாலும் பாக்கி.................

திடீரென்று சிரித்தான் சிங்கன். அவனுக்குப் புரிந்து போய்விட்டது. முகம் சிவந்தது. ..ண் இருண்டது.

வயலில் நிறையப்பேர் தெரிந்தார்கள். ஏரில் பூட்டிய மாட்டை. ஏய் ஏய் விரட்டுவது, மூலை கொத்துவது, நீலம், சிகப்பில் டிரக்டர்கள், எல்லாம் மங்கித் தெரிந்தன. ஒருமாடு சோமையரின் வயலுக்குள் இறங்கியது. ''செங்காரி வா இஞ்சாலை என்றான்.

''செங்காரியும் சிலையும் அடிச்சுக் கலை மாட்டை, இண்டைக்கு உழுதுபோட்டன் இனிமேல் மாட்டை விடக் கூடாது. சொல்லிப்போட்டன் என்றார் சோமையர்.

சிங்கன் ஒன்றும் சொல்லாமல் மேலே மாடுகளைச் சாய்த்துக்கொண்டு போனான். மனம் மட்டும் படபடத்தது.

மத்தியானம் பாக்கியம் ஓடி வந்தாள். ''வெள்ளச்சி கண்டு போடுது, தலை வெளியிலை வந்திட்டுது. பிறகு கஷ்டப்படுகுது. ஒருக்கால் வந்து பாருங்கோ.''

சிங்கன் விரைந்துசென்றான். மேயத்தொடங்கின நேரம் மாடுகள் திரும்பி வயலுக்கை இறங்காயினம் என்ற சிங்கனின் நம்பிக்கையைத் தகர்த்து சிங்கனின் தலை மறைந்த சில நிமிடங்களுக்கெல்லாம் மாடுகள் தலையைத் திருப்பி உதறி அப்பிடியும் இப்படியும் பார்த்துவிட்டு உழுத வயல்களுக்குள் இறங்கத் தொடங்கின.

(தொடரும்)

## வசந்தம் நித்தம் வீசும்

சீதன வுவர் நீங்கி
சாதிக் கழி வோய்ந்து—
செழுமை நீர் சுரந்து
சமுதாயச் சாக்கடை—
சந்தன ஆற்றான பின்—
வசந்தம் நித்தம் வீசும்!
வாழ்வுலர்ந்து வாடிவதங்கிய
வயர்புஷ்பங்கள் தேன்சுரக்கும்!
அல்லற் பாசியுற்ற வீணை
பல்லவி இசை பொழியும்!
உணர்வற்ற சிலைகளும்
உயர்கலை படைக்கும்!
பட்ட தனிமரங்களும்
தளிர்ப் பெய்தி தான்கனியும்!
விந்தைகள் பலகாணும்!
புத்தொளி புற்றரையில்
ஒத்திகை அரங்கேற
வளமோடு வாழ்வமைய
வசந்தம் நித்தம் வீசும்!

[கடந்த வார 'வசந்தத்தைத் தேடாதீர்' என்ற 'மண்டைதீவு கலைச்செல்வி' யின் கவிதைக்கு — இது பதில் கவிதை]

— புலோலியூர் ஆ. இரத்தின வேலோன் —

## முதன் முதற் பழகிய மும்மணிகள்

யாழ்—தமிழ்ப் பல்கலைக் கழகம், முதன்முதல் பல்கலைக் கழகம், நிகழ்ந்த பட்டமளிப்பு விழா முதன்முதற் பட்டமளிப்பு விழா, பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்களுள், முதற்கண் கௌரவிக்கப்பட்டவர்கள், பேராசிரியர் உயர்திரு ஆ.வி.மயில்வாகனம்அவர்கள். ஆன்மீகச்செல்வர்கள்; ஆன்மீக அநுபவம் உள்ளவர்கள் அவர்கள்.

அமைத்தவர்கள் பேராசிரியர் உயர்திரு. அ, சின்னத்தம்பி அவர்கள்.

வைத்தியபதியாய்ப் பேராசிரியர் அவர்கள் எங்கே, எங்கே வாழ்ந்தார்களோ. அங்கே அங்கே மருத்துவகூடம் போற் கல்விக்கூடங்கள் மிளிர்வதைக் காணலாம்.

'கற்க க்சடறக் கற்பவை
கற்றபின்
நிற்க அதற்குத் தக'

என்ற தேவர் வாக்கைப்

## இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

'உடம்பை வளர்த்தேன்
உயிர் வளர்த்தேனே'

என்கின்றார் திருமூலர்.

உடல்வளர்ச்சி உயிர்வளர்ச்சிக்கின்றியமையாத தென்ற உயரிய குறிக்கோளை, சம்பந்தப்பட்ட, சம்பந்தப்படும் யாவருக்கும் எடுத்துக்காட்டுவதாயிருந்தது. ஆத்மீகச் செல்வர்களான பேராசிரியர் அவர்களுக்கு முதற்கண் வழங்கிய 'விஞ்ஞான கலாநிதி' என்கின்ற கௌரவப் பட்டம், குறிக்கோள் வாழ்க, வளர்க.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தன் பெருமையை உயர்த்திக்கொண்டது.

0 0 0

'ஆலயந்தொழுவது
சாலவும் நன்று'

என்ற உலக அன்னையின் வாக்கைச் சிரமேற்கொண்டவர்கள் பேராசிரியர் அமரர் உயர்திரு. பே. கனகசபாபதி அவர்கள், பேராசிரியர் அவர்கள் மறைந்தும், அவர்களின் பகாமடம்பு மறையாமல், குறிஞ்சிக்குமரன் கோயிலாய்மிளிர்கின்றது; என்றும் மிளிர்ந்துகொண்டேயிருக்கும்.

பேராசிரியர் அவர்களின் வலக்கரம் செய்வதனை, இடக்கரம் அறியாது, தன்னை வெளிக்காட்ட நாணுவதொரு கற்பகதரு பேராசிரியர் பே. கனகசபாபதி அவர்கள். அவர்களின் ஆத்மா சாந்தி உறுக; அவர்கள் சரித்திரம் தளிர்த்துக்கொண்டேயிருக்கவேண்டியது.

0 0 0

உடல் வளர்ச்சி உயிர் வளர்ச்சிக்கு உபகரிக்கும் முறையில் ஆங்காங்கு கல்விக்கூடங்களை பேணியவர்கள் பேராசிரியர் அவர்கள். இதனால்

மருத்துவஉலகுக்கு எடுத்துக் காட்டாய் விளங்குகின்றார்கள் பேராசிரியர் விஞ்ஞான கலாநிதி திரு. அ. சின்னத்தம்பி அவர்கள். தமிழ் தந்த சி. வை. தாமோதரம்பிள்ளையின் நடைமுறையோடு ஒப்பிடத்தக்கது. நமது பேராசிரியர் அ. சின்னத்தம்பி அவர்களின் கல்விச்சேவை நடைமுறை.

அவர்களின் கல்விச்சேவை இருந்தவாறு!

0 0 6

பேராதனைப் பல்கலைக்கழக அவையத்தில் குறிப்பிட்ட மும்மணிகளின் பழக்கத்தை முதன் முதற் கிடைக்கச்செய்த திருவருளைப் பிரார்த்திப்பேனாக.

## கமநலம்

கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகம் வெளியிடும் காலாண்டுச் சஞ்சிகையான 'கமநலம்' பங்குனி-ஆனி இதழ் வரப்பெற்றோம்.

இவ்விதழில் நீர் முகாமைத்துவம், கமத்தொழில் உற்பத்திகளின் சந்தைப்படுத்தல் ஆகியன பற்றிய பல கட்டுரைகள் வெளியாகியுள்ளன.

1 ரூபா 50 சதம் விலையுள்ள இச்சஞ்சிகையைப் பணிப்பாளர், கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகம், 114, விஜேராமமாவத்தை, கொழும்பு-7 என்ற விலாசத்தில் நேரடியாக அல்லது தபால் மூலம் பெறலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. பொ. த. உயர்தரம் (புதிய பாடத்திட்டம்)

# விலங்கியல்

1. மேலணி இழையத்தின் இயல்புகள் யாவை?

(அடித்தள மென்சவ்வு உண்டு; நெருக்கமாக ஒழுங்கு படுத்தப்பட்ட கலங்கள், சீமெந்துப் பொருள் உண்டு)

2. கட்டங்கொண்ட மேலணி காணப்படும் அமைப்புகள் மூன்று கூறுக?

(போமனின் உறை, குருதிக் கலன்களின் மேலணி, சுற்றுவிரி.)

3. பாலூட்டிகளில் நிலைமாறுகின்ற மேலணி எங்கு காணப்படுகின்றது?

(சிறுநீர்ப்பையின் சுவரில்)

11. குருதித்திரவ விழையத்தில் கூடுதலாகக் காணப்படும் குருதிப் புரதப்பொருட்கள் யாவை?

(அல்புமின், குளோபியுலின். பைபிரினோஜின்)

12. முள்ளந்தண்டுள்ளவிலங்குகளின் செங்குருதிக் குழியங்களின் கலவுருவில் காணப்படும் சுவாசநிறப்பொருள் யாது?

(ஈமோகுளோபின்)

13. மனிதனின் குருதியில் காணப்படும் வெண் குழியங்கள் யாவை?

## திருமதி ரி. சிதம்பரநாதன் பி.எஸ்ஸி.

(ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி)

4. முள்ளந்தண்டு விலங்குகளில் படைகொண்ட செதின் மேலணி எங்கு காணப்படுகின்றது?

(மேற்றோல், வாயினதும் களத்தினதும் போர்வை, விளிவெண்படலத்தின் வெளிப்பகுதி, யோனி மடல் போர்வை)

5. களத்தின் உட்பரப்பை மூடிய மேலணி வகை யாது?

(படைகொண்ட மேலணி)

6. பின்வருவனவற்றில் காணப்படும் அடிப்படை வகைத் தொடுப்பிழையத்தைச் சுட்டிக்காட்டுக?

★ முள்ளந் தண்டிடை வட்டத்தட்டு - உண்மையான தொடுப்பிழையம்.

★ வெளிக்காதுச் சோணை - வன்கூட்டிழையம்.

★ சிரை - உண்மையான தொடுப்பிழையம்.

★ இணையம் - உண்மையான தொடுப்பிழையம்.

★ தேரையின் உட்தோல் - உண்மையான தொடுப்பிழையம்,

7. சிற்றிடை விழையத்திற்கும் மேலணி இழையத்திற்குமிடையில் காணப்படும் மூன்று பிரதான கட்டமைப்பு வேறுபாடுகள் தருக?

சிற்றிடை விழையம் (1) கலங்கள் ஐதாக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும். (2) தாயம் உண்டு. (3) அடித்தள மென்சவ்வு இல்லை.

மேலணி இழையம் - நெருக்கமான ஒழுங்கில் காணப்படும். தாயம் இல்லை, அடித்தள மென்சவ்வு உண்டு.

8. சிற்றிடை விழையத்தில் காணப்படும் கலவகைகளை நிரற்படுத்தி அவைஒவ்வொன்றினதும் தொழிற்பாடுகளையும் தருக?

(1) அடிநாட்டக்கலம்- சுரத்தல், (2) நாரரும்பர் - சுரத்தல் (மஞ்சள் நார்) (3) பெருந்தின் கலங்கள் - பற்றீரியா போன்றவற்றை அழித்தல். (4) கொழுப்புக்கலம் - சேமித்தல்.

9. அடிநாட்டக்கலங்களின் மூன்று தொழில்கள் எவை?

(1) அடிப்பதார்த்தம்-தாயம் சுரத்தல், (2 எப்பாரின் சுரதல் ( epa in g). (3) இஸ்மின் சுரத்தல் (Histamine)

10. குருதியில் காணப்படும் இரண்டு வகையான சிறுதுணிக்கைகள் யாவை?

(செங்குருதிச் சிறுதுணிக்கை, வெண்குருதிச் சிறுதுணிக்கை)

(நடுநிலைநாடி, இயோசினுடி. மூலநாடி, நிணநீர்க்குழியங்கள், ஒருகுழியங்கள்)

14. பின் வருவனவற்றில் செங்குழியங்கள் எங்கே உற்பத்தியாக்கப்படுகின்றன?

மனிதன்- செவ்வென்புமச்சை, மனித முளையம்- ஈரல், தேரை-செவ்வென்பு மச்சை.

15. குருதித் திரவ இழையத்தில் காணப்படும் பதார்த்தங்கள் எவை?

நீர், அசேதனப் பொருட்கள், சேதனப் பொருட்கள், ஓமோன்கள், வாயுக்கள்.

16. குருதி உறையும்போது ஒகழும் மாற்றங்களின் பிரதான படிகளை ஒழுங்கு முறையில் தருக?

புரோத்துரொம்பின் $\xrightarrow{Ca++}$ துரொம்பின், துரொம்போகைனேஸ். பைபிரினோஜின் $\xrightarrow{\text{துரொம்பின்}}$ பைபிரின்.

பைபிரின் ⟶ கலங்கள் ⟶ குருதியுறைதல்.

17. சோடியம் ஒட்சலேற்று எவ்வாறு குருதியுறைதலைத் தடுக்கிறது.

Ca++ வீழ்ப்படிவாக்குகிறது.

13. மனிதனின் குருதி வகைகள் யாவை?

A, B, AB, O.

19. பளிங்குக் கசியிழையத்தில் காணப்படும் சேதன ஆதாரப் பொருள் யாது?

கொந்திரன்.

# ஐ. நா. வும் இன்றைய உலகும்

உலக நாடுகளின் சங்கமான ஐ. நா. வில் இன்று 153 நாடுகள் அங்கம் வகிக்கின்றன; உலகின் பிரச்சினைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதும் உலகின் சமாதானத்தைப் பேணுவதும் தான் ஐ. நா. வின் தலையாய கடமை.

2-வது உலக யுத்தம் ஏற்படுத்திய நாசகார விளைவுகளை உலக மக்கள் அனைவரும் அறிவர். எனவே மீண்டும் ஒரு யுத்த நாசம் ஏற்படாது தடுப்பதற்கும் உலகில் சாந்தியும் சமாதானமும் கூட்டுறைப்புக்களும் நிலவுவதற்கான மாபெரும் பொறுப்பை உலக மக்கள் ஐ. நா. சபைமீது சுமத்தியிருக்கின்றனர்.

இன்று ஐ. நா.சபையின் 35 வது கூட்டத்தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. உலகில் சமாதானத்தை நிலைநிறுத்தவேண்டிய ஐ. நா. வின் பிரதான கடமையைப் பல நாடுகளின் பிரதிநிதிகள் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றனர்.

அமைதியைச் சீர்குலைக்கும் சக்திகள் இன்னமும் உலகில்

'கண்டோஸ்'

உள்ளன. ஆயுதப் போட்டியைத் தூண்டி கொள்ளை லாபம் அடிப்பதே இவற்றின் நோக்கம். இவற்றின் நடவடிக்கைகளால் பலநாடுகள் தமது ராணுவச் செலவினங்களை அதிகரிக்கவேண்டியுள்ளன. இதனால் இந்த நாடுகளுக்கு ஏற்படும் இன்னல்கள் ஏராளம்.

உலகில் பட்டினி, வறுமை, பிணி, கல்வியின்மை ஆகியவற்றை அழித்தொழிப்பதற்கு இராணுவத்துறை செலவுகள் பிரதான, தலையாய முட்டுக்கட்டைகளை இடுகின்றன. இச் செலவினங்களை நாடுகளின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வகைசெய்வது ஐ. நா. வின் பிரதான கடமைகளில் ஒன்று.

அணுவாயுதச் சோதனைகளை நிறுத்துதல், அணுவாயுதங்களை ஒழித்தல், கதிரியக்க ஆயுதங்களைத் தடை செய்தல் இவை அவசியமான பணிகள். இந்த ஆயுதங்களை வைத்திருக்கும் நாடுகளைக்கூட்டி உலகஒப்பந்தம் ஒன்றைச் செய்வதற்கான ஆலோசனைகளைச் செய்ய வகை செய்வது ஐ. நா. வுக்குள்ள உடனடியான பணி.

இன்று மனிதன் வாழும் சூழல் அசுத்தமடைந்துவருகிறது. குடிநீர் வளங்கள் அருகிவருகின்றன. காடுகள் மறைந்துவருகின்றன.

எனவே மனிதன் வாழும் சூழலைப் பாதுகாப்பதற்கான முயற்சி அடுத்பணியாக உள்ளது. எதிர்கால சந்ததிக்கு அழகான உலகை சுத்தமான வானம், நீர், மண், காற்று ஆகியவற்றை அளிக்கவேண்டியது இன்றுள்ளவர்களது பொறுப்பு. அத்துடன் உலகின் இயற்கை வளங்கள் சகல நாடுகளின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படவேண்டியவை.

(9ம் பக்கம் பார்க்க)

## உங்களுக்குத் தெரியுமா?

1. இரத்த அமுக்கத்தை அளவிடும் கருவி எது?
2. பாலிலுள்ள வெண்ணெயை அளவிடும் கருவி யாது?
3. கண்ணாடியை கடினமாக்க உபயோகமாகும் பொருள் யாது?
4. உலகின் மிகப்பெரிய இயற்கைத் துறைமுகம் எது?
5. அயர்லாந்தில் செய்ப்படும் மதுபானம் எது?
6. மிகப்பெரிய முட்டையிடும் பறவை எது?
7, கொழும்பிற்கு எந்த ஆண்டு மின்சார வெளிச்சம் ஏற்படுத்தப்பட்டது?
8. மலைநாடுகளில் றப்பர் தோட்டம் எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது?
9, எந்த ஆண்டு மோட்டார் கார் வந்தது?
10. புகைப்பட கருவி எந்த ஆண்டில் வந்தது?

தொகுப்பு:
செல்வி
தேவகி கதிரவேற்பிள்ளை
(வயாவிளான் ம. ம. வி)

விடை:

1. ஸ்பிக்னோமனோ மீட்டர். 2. லக்ரோமீற்றர். 3. பொட்டாசியம் காபனேட். 4. றியோ டி ஜெனரோ, 5. உவிஸ்கி, 6. தீப்பறவை, 7. 1895-ம் ஆண்டு, 8. 1890ம் ஆண்டு, 9. 1895-ம் ஆண்டு, 10. 1856-ம் ஆண்டு.

# மாணவர் எண்ணம்

# நம் உலகமும் அண்டமும்

சூரிய ஒளி நமக்குக்கிடைக்கும் காலத்தையே நாம் பகல் என்று கூறுகிறோம். மாலையில் சூரியன் மேற்கில் மறைந்து அடுத்தநாள் காலையில் தோன்றும்வரை உள்ள காலம் இரவு எனப்படும்.

பகல் ஒளியும் வெப்பமும் நிறைந்து இருக்கின்றது. இரவு இருண்டும் ஒளியற்றும் இருக்கிறது. சூரியன் மறையும் போது அது ஒரு சிவப்பு வட்டம்போல் இருக்கிறது. ஆனால் அது தட்டையான வடிவமுள்ளது அல்ல. கோளவடிவமுள்ளது. தூரத்தில் இருப்பதால் வட்டமான தகடுபோல் காணப்படுகிறது.

சூரியன் பூமியைவிட மிகவும் பெரியது. ஆனால் அது நமக்கு சிறிதாகக் காணப்படுகின்றது. அது தொலைவிலிருப்பதே அவ்வகைத் தோற்றத்திற்குரிய காரணம். சூரியன் மிகுதியான வெப்பமுடையது. அது தொலைவிலிருப்பதால் வெப்பத்திலிருந்து மிகமிகச் சிறிய பகுதியைத்தான் நாம் பெறுகின்றோம். சூரியன் இல்லை என்றால் உலகத்தில் நாம் வாழமுடியாது.

ஒளி புகாத பொருள்கள் சூரிய ஒளியை தடுக்கும். அதனால் நிழல் வரும். ஒளி எப்பக்கத்தில் இருந்துவருகிறதோ எதிர்ப்பக்கத்தில் இருந்து நிழல் வரும். காலையில் சூரியன் கிழக்கில் உதிப்பான். மாலையில் மேற்கில் சூரியன் மறைவான். காலையிலும் மாலையிலும் நிழல்கள் நீளமாகவும், நடுப்பகலில் குட்டையாகவும் இருக்கும்.

## காற்று

காற்று எங்கும் பரவியுள்ளது. நாம் சுவாசிப்பதற்கு காற்றுத் தேவை. காற்றில்லாவிட்டால் நாம் உயிர் வாழ முடியாது.

நாம் துணி காய்வைக்கும் போது துணியில் உள்ள ஈரம் காய்ந்துவிடுகின்றது. பிரியும் ஈரம் நீராவி ஆகின்றது. காற்றோடு கலந்துவிடுகின்றது.

சுவர்களுக்கு வெள்ளை அடிக்கின்றோம். சுண்ணாம்பு சுவரில் படிகின்றது. ஈரம் நீராவி ஆகின்றது. குளிர்ச்சியான இடங்களில் காற்றுப் படும் போது காற்றோடு கலந்துள்ள நீராவி சுருங்கி நீர்த்துளிகளாக அப்பரப்பின்மேல் படிகின்றது.

நாம் சமைக்கும்போதும், புகையிரதம் ஓடும்போதும், நீராவிக் கப்பல் செல்லும் போதும், தொழிற்சாலைகள் இயங்கும்போதும்புகைபோக்கி மூலமாக வெளியே செல்கின்றது. காற்றோடு கலக்கின்றது இவ்வாறு காற்றில் புகை, நீராவி தவிர தூசியும் கலக்கின்றது. புகையும் தூசும் காற்றோடு கலந்து காற்றை அசுத்தப்படுத்துகின்றது.

நாம் காற்றை உள்ளிழுத்து வெளியே விடுகின்றோம்.

செல்வி கமல்விழி
சச்சிதானந்தன்

நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட், போன்; 7199.

யாழ்ப்பாணம்

கோழிப் பண்ணையில் இலாபம் பெற டயமிக்ஸ்

டயமிக்ஸ் - அமெரிக்காவில் டயமன்ட் ஷம்றொக் ஸ்தாபனத்தினால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்ட பெறுமதிமிக்க இத் தீனி உயர்ரக விட்டமின்களும் தாதுப்பொருள்களும் கொண்டது. விலையோ சகாயம்.

முட்டைக் கோழித் தீன் 450 கிராம் பை ரூ. 20/90
குஞ்சுக் கோழி ஆரம்பத் தீன்,
இறைச்சிக் கோழித் தீன் 450 கிராம் பை ரூ. 21/90
25 கிலோ கிராம் பைகளிலும் கிடைக்கும்

இலங்கையில் ஏக விநியோகஸ்தர்கள்
மாஸ்டர் ஃபீட்ஸ் லிமிட்டெட்
30, கிறேஸர் அவனியூ, தெஹிவளை. தொலைபேசி: 071-5123
இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் கிடைக்கும்.

டயமிக்ஸ்-இலாபம் தரும் கோழிப்பண்ணைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெலஸி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
புகுந்த வீடு

றாஜன் (யாழ்ப்பாணம்)
தினசரி 10.30 a. m 4-45,
7-15, & 9-45 p. m.
(Action Color)
MISSION IN KABUL

சாந்தி
யாழ்நகர் - தினசரி 4 காட்சிகள்
நீயா?
'வெள்ளிவிழா''
வண்ணச்சித்திரம்
இன்னும் சில தினங்கள் மட்டுமே

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 4-45, 7-00 & 9-45
Kris Kristofferson, Burt Young, Ali Macgraw
in
CONVOY
(Scope- Color)
எதிர்பாருங்கள்
ஒரேவானம் ஒரேபூமி

வசூலில் பெரும் சாதனை! 5-வது வெற்றி வாரம்!
இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி
தினசரி 4 காட்சிகள்
ராஜா
(யாழ்ப்பாணம்)
கலைஞர் கருணாநிதியின்
கைவண்ணத்தில் உருவான வசனம்.
ஜெய்சங்கர்-ஜெயசித்திரா-அசோகன்
மற்றும் பலர் நடித்த
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 4-15,
7-15, 9-30
THE
GAUNTLET

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சௌகார்ஜானகி
மகாகவி
காளிதாஸ்

ராணி - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6 30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
சட்டம் என் கையில்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

# கடியெறும்பு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திக்குதறி விளையாடியது. அமெரிக்கத் தயாரிப்பான ,'மிக்'', ''மிராஜ்'', ''பான்ரம்'' இன விமானங்களின் ''பி 52'' ரக குண்டு வீச்சுப் பிரிவுபோலும் தாக்குதல் அகோரமாகவே இருந்தது, எறும்புத்தேசமே அதிர்ந்தது. சில இடங்கள் தூக்கிவீசப்பட்டன. அலவாங்கில் பதுங்கியிருந்த எறும்பினர் குண்டு வீசிய விமானங்களை விமான எதிர்ப்புப் பீரங்கிகள் மூலம் சுட்டுவீழ்த்தினர். அதாவது இடையிடையே அலவாங்குகள் கைதவறி விழுந்தன. இதை எறும்புத்தேச வானொலி உத்தியோகபூர்வமாக அறிவித்து செய்தியை ஊர்ஜிதம் செய்தது. இச்செய்தியை எதிரிநாட்டு வானொலி மறுக்கவில்லையாயினும் ''எறும்புத் துருப்பினர் சரணடையும் வரை யுத்த நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லையெனத் திட்டவட்டமாக அறிவித்தது. போர் ஆரம்பித்த சில நிமிடத்தில் எறும்பினரின் நாட்டுக்குள் எல்லையையும் தாண்டி பதின்நான்கு அங்குலம்வரை ஊடுருவி அப்பிரதேசம் முழுவதையும் தாம் கைப்பற்றியதாக எதிரிகள் அறிவித்தனர்.

எறும்புத் துருப்பினரின் ஆயுதங்கள் தரங்குறைந்தவையோ என்னவோ எதிரிகளுக்கு ஈடுகொடுக்கமுடியாமல் பின்வாங்கத் தொடங்கினர். தப்பியோடிய ஆயிரக்கணக்கான படையினர் ''விறகுக் காடு''களில் புகலிடம் தேடினர். சில துருப்பினர் எல்லைகளையும் கடந்து ஓடினர். அவர்களை மடக்க எதிரிகள் நவீன யுக்திகளைக் கையாண்டனர். அதாவது டி. டி. ரி. மருந்தை மேலிருந்து தூவினர். விமானப் படையினர் நச்சுப்புகைக்குண்டுகளை வெடிக்கின்றனரோ என எறும்புத் துருப்பினர் அஞ்சியோடினர். சரணடைவதைத் தவிர வேறுவழியில்லையென்பதை யுணர்ந்த எறும்பு ராணுவத்தினர் தம் ராணுவத் தலைமைப்பீட உத்தரவுகளைத் தளர்த்தி இரத்துச்செய்தனர். இதையறிந்த எதிரிகள் இறுதித்தாக்குதலாக மண்ணெண்ணையைத் தெளித்து தீ வைத்தனர். உடனே எறும்புநாடே தீப்பற்றியெரிந்தது. ஈரான் எண்ணை நகரமான அபடான் நகரம், ஈராக்கின் புத்திசாலித்தன விமானத் தாக்குதலால் தீப்பிடித்து எரிந்ததுபோல் தெரிந்தது. தூரத்தில் நின்று பார்ப்போருக்கு எறும்புத்துருப்பினர் தீயில் வெந்து.....வெடிக்கும் சத்தம் கேட்டவண்ணம் இருந்தது.

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 9-30 மணிக்கு
4 காட்சிகள்
கீதாலயா மூவிஸ் அளிக்கும்
மாத்தளை கார்த்திகேசுவின் டீன்குமார், K. S. பாலச்சந்திரன், பரீனலை,
விஜயராஜா நடித்த
'அவள் ஒரு ஜீவநதி'
சிறந்த தமிழ் திரைக் காவியம்.

எழில் மிகு யாழ். ஸ்ரீதர் அரங்கில்
வெற்றி முரசு கொட்டும் 4-வது வாரமாக
அலை மோதும் ஜனசமுத்திரத்தில் கொட்டும் மழையிலும்
கொட்டகை நிறைந்த காட்சிகளாக
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின் இதயந்தனில் தனி இடத்தை
எடுத்துக்கொண்ட தமிழக முதல்வர் M G R மற்றும்
லதா, நிர்மலா, V K. ராமசாமி, P S வீரப்பா
நம்பியார், தேங்காய், நாகேஷ், கண்ணன்
மற்றும் பலர் திறம்பட நடித்த ஸ்ரீதரின்
மீனவ நண்பன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்
(வண்ணக்கலர்)

# ''சமயத்தின் பெயரால் வீண்செலவு செய்யாதீர்''

(உடுப்பிட்டி)

''எமது சமுதயேத்தில் சமயத்தின் பெயரால் வீண் செலவுகளைச் செய்துவருகின்றோம். இதனைத் தவிர்த்து சமுதயத்திற்குப் பயன்தரக்கூடிய விதத்தில் செலவுசெய்தல்வேண்டும் என்று கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்து கரவெட்டி மத்தி கிராமஅபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டம் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் திரு. இ. முத்துத்தம்பி தலைமையில் நடைபெற்றது.

திரு. தம்பிமுத்து தொடர்ந்து பேசுகையில்:

''யாழ். மாவட்டத்தில் உள்ள இளைஞர்களிடம் உலக அறிவு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது, வெளியுலகம் பற்றிய நூல்களையும், பத்திரிகைகளையும் படிக்கும் ஆர்வமும், வசதியின்மையுமே இதற்குக்காரணமாகும். கிராமப்புற இளைஞர்களிடம் நூல்களைப் படிக்கும் ஆர்வம் வளர்க்கப்படவேண்டும் அதற்கான வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டியது கிராம அபிவிருத்திச் சங்கங்களின் கடமையாகும்.

முன்னர் போன்று எமது இளைஞர்கள் உடனடியாக வேலைவாய்ப்புப்பெறும் நிலை இன்று இல்லை. இளைஞர்கள் வேலைக்காக வெளிநாட்டு மோகம் பிடித்துத்திரிகிறார்கள் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்புக்கள் அருகிக்கொண்டே வருகின்றன நாமே நமது சுயதேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய வழிவகைகளை உருவாக்க வேண்டும். (அ)

# கடுஞ்சொல்தாங்காது இளம் மனைவிதற் கொலை

(மாவிட்டபுரம்)

கணவர் ஏசியதைப் பொறுக்க மாட்டாத இளம் பெண் ஒருவர் நஞ்சு அருந்தி மரணத்தைத் தழுவினர்.

குப்பிளானைச் சேர்ந்த கணேசலிங்கம் ரஞ்சிதமலர் (21வயது) என்பவரே இம்முடிவை எடுத்தவராவார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு, நா. தம்பிராசா இம்மரணம் குறித்து விசாரணை நடத்திய சமயம் காலமானவர் திருமணம் செய்து 3 வருடமென்றும் அவருக்கு ஒரு குழந்தை உள்ளதாகவும், சம்பவதினம் வீட்டில் அடுக்கப்பட்டிருந்த புகையிலையின் மேல் குழந்தை மண்ணெய்யை ஊற்றியதையடுத்து காலமானவரைக் கணவன் ஏசியதாகவும் அதனால் மனமுடைந்த அவர் நஞ்சை அருந்தியதாகவும் சாட்சியங்களில் தெரிவிக்கப்பட்டது.

தற்கொலை என தீரப்பு வழக்கப்பட்டது. (அ)

## மாகியப்பிட்டியில் தையல் பயிற்சி நிலையம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் - மாகியப்பிட்டி கிராமஅபிவிருத்தி சங்கம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க சண்டிலிப்பாயில் தையல் பயிற்சி நிலையம் ஒன்றை விரைவில் நிறுவுவதற்கு தொழில் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்கான கட்டிடம் தெரிவுசெய்யப்பட்டவுடன் நிலையம் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (அ)

## சேலம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டுள்ள நூல்நிலையத்தில் இவர் பயன்படுத்திய நூல்களும் இவரது குறிப்புக்களும் வைக்கப்பட்டுள்ளன. இன்றும் அந்நூல் நிலையத்திற்குச் செல்பவர்கள் விஜயராகவாச்சாரியார் தமது புனித கைகளால் தொட்டும் படித்தும் வந்த நூல்களைத்தாமும் பார்வையிட்டும் படித்தும் ஆக்கமும் ஊக்கமும் பெறுகின்றனர்.

(முற்றும்)

## ஐ. நாவும்:....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இதைப் பெரிய நாடுகளான அமெரிக்காவும், சோவியத் யூனியனும் உணர்ந்துகொண்டுள்ளன: சோவியத் யூனியன் இதுபற்றி சில ஆலோசனைகளையும் ஐ. நா. சபையில் கூறியுள்ளது. எனவே இதிலும் உலகநாடுகளின் ஒருங்கிய உழைப்பைத் திரட்டும் பிரதான பணியை ஐ. நா. கொண்டுள்ளது.

பல நாடுகளுக்கு மத்தியில் உள்ள பிணக்குகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து உலகில் சமாதானத்தை நிலைநாட்டும் பணி ஐ. நா. வுக்கு எளிதான பணியல்ல. ஆயினும் எவ்வித கஷ்டம் நேரினும் இதைச் செய்யவேண்டியது அதன் தலையாய பொறுப்பு.

— ராஜி.

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி. ஞாயிறு 2 4
சிவாஜி — சாவித்திரி
குறவஞ்சி

## கணவனுக்கும் மனைவிக்கும் அபராதம்

(பண்டத்தரிப்பு)

சட்டவிரோதமான முறையில் வடிசாரயம் தயாரித்ததாகக் குற்றம் சாட்டி ஆனைக்கோட்டைப் பொலிசாரினால் ஆஜர் செய்யப்பட்ட கணவனுக்கும், மனைவிக்கும் தலா 250 ரூபா அபராதமும், 5 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கடூழியச் சிறைத்தண்டனையும் யாழ். நீதிமன்ற நீதிபதியினால் விதிக்கப்பட்டது. ஆனைக்கோட்டை பிடாரி கோவிலடியைச் சேர்ந்த சின்னப்பு சண்முகம் எனபவரது விட்டில் வடிசாராயம் காய்ச்சப்பட்டுவதாக ஆனைக்கோட்டைப் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. சரத் சந்திரா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் அங்கு சண்முகம் என்பவரும், அவரது மனைவியும் வடிசாராயம் காய்ச்சிக் கொண்டிருட்பதைக் கண்டு இருவரையும் கைது செய்ததுடன் உபகரணங்களையும் கைப்பற்றினார்கள். இவர்கள் இருவரையும் பொலிசார் யாழ். நீதிமன்ற நீதிபதி திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்தபோது இருவரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து நீதிபதி தண்டனை விதித்தார். (அ)

## 50 ஆயிரம் ஒதுக்கீடு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நிரந்தரக் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்டவர்களுக்காக மானியத் தொகையாக 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. நிரந்தர குடும்பக் கட்டுப்பாடு செய்பவர்களுக்கு 500 ரூபா விதம் வழங்கப்படும்.

மன்னார் மாவட்டத்தில் இதுவரை 25 பேர் நிரந்தரக் குடும்பக்கட்டுப்பாடு செய்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வனைஸ்ட் நெளிவுள்ள
கூரைத்தகடுகள்

35 U S G & 32 U S G
நீளம் 6 அடி முதல் 10 அடிவரை
சி ஐ சி பெயின்ற் வகைகள்

**கதிர் ஹாட்வெயர்ஸ்**
(TILLY'S GROUP)
11 1-2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். போன்: 7130


# றெபின் தம்புவின் தமிழ்ப் படம்

(யாழ்ப்பாணம்)

பிரபல சிங்களப் படத் தயாரிப்பாளரும், டைரக்டருமான திரு றெபின் தம்பு, யாழ்ப்பாணத்தில் புதிய தமிழ்த் திரைப்படத்தைத் தயாரிக்கும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.

இரண்டு இந்திய நட்சத்திரங்கள் நடிக்கும் இப்படத்தில், உள்ளூர் நடிக, நடிகையரின் தேர்வு தற்போது நடைபெற்றுவருகிறது.

திரு, றெபின் தம்பு டைரக்ட் செய்யும் மேற்படி படத்திற்கான திரைக்கதை, வசனத்தை, தீப்பொறி பத்திரிகை ஆசிரியர் திரு. அந்தனிசில் எழுதியுள்ளார்.

பாடல்கள் இந்தியாவில் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, படப்பிடிப்பு யாழ்ப்பாணத்தில் நடைபெறுமென அறியப்படுகிறது.


**கட் பீஸ்**
தீபாவளி மலிவு விற்பனை
பப்ளின் மீற்றர் 9-50.
சீத்தை மீற்றர் 10-50.
டசூர் மீற்றர் 10-50.
டிரில் மீற்றர் 10-50.
சூட்டிங் மீற்றர் 15-00.
பிஜாமா மீற்றர் 12-00.
மற்றும் பல ரகங்கள்.

**சீக்கோ டிரேடர்ஸ்**
(உட்புறம்)
13, நவீனசந்தை, யாழ்ப்பாணம்


# அடுத்தவருட பட்ஜட்டில் ரூ. 1559 கோடி 80 லட்சம் துண்டுவிழும்

## மகாவலி அபிவிருத்திக்கு அதிக நிதி கல்விக்கும் கூடுதல் நிதி

(கொழும்பு)

அடுத்தவருடவரவு-செலவுத் திட்டத்தில் ஆகக் கூடுதலான நிதி, மகாவலி அபிவிருத்தி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

1981ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தச் செலவினங்களுக்கென 2584 கோடி 78 லட்சத்து 37 ஆயிரத்து 181 ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் துண்டு விழும் தொகை 1559 கோடி 80 லட்சம் ரூபாயாகும்.

அடுத்த மாதம் 5ந் திகதி பாராளுமன்றத்தில், துண்டு விழும் இத்தொகையை எவ்வாறு சரிக்கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்பதை நிதி அமைச்சர் தெரிவிப்பார்.

மாவட்ட அமைச்சுகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சுக்கு 186 கோடியே 30 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. திட்டமிடல் திட்ட அமுலாக்கல் அமைச்சுக்கு 72 கோடியே 20 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

## புதுடில்லி சென்றதன் காரணம் பற்றி கருணாநிதி

சென்னை அக். 25

தேசிய பாதுகாப்பு அவசர சட்டத்தை தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அத்துமீறிப் புகுத்துவதை தடுக்குமாறு மத்திய அரசைக் கோரவே தாம் புதுடில்லி சென்றதாக திரு. மு. கருணாநிதி கூறியுள்ளார்.

தி. மு. க. தலைவரும், தமிழக எதிர்க்கட்சித் தலைவருமான திரு. மு. கருணாநிதி இரண்டு நாள் பயணமொன்றை மேற்கொண்டு புதுடில்லி சென்றிருந்தார்.

பிரதமர் திருமதி இந்திரா காந்தி, உள்துறை அமைச்சர் திரு. வேம்சிங், சட்ட அமைச்சர் திரு. பி. சிவசங்கர், கப்பல் போக்குவரத்து அமைச்சர்திரு ஏபி.சர்ம ஆகியோரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்திய திரு. கருணாநிதி இன்று சென்னை திரும்பினார். (கு)

## குடி ர்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மலசலக் கூடங்கள் அதிகரிப்பினாலேயே இந்த நிலை ஏற்பட்டிருப்பதாக இவர்கள் கண்டறிந்துள்ளனர்.

இந்த மலசல கூடங்களிலுள்ள கழிவுப்பொருள் கசிந்து பூமிக்கடியில் ஓடும் பாதாள ஆற்று நீருடன் கலப்பதாகவும் இந்தப் பாதாள ஆறுகளிலிருந்தே கிணறுகளுக்கு நீர் கிடைப்பதனால் இந்நீரில் மலம் கலந்து அசுத்தமடைகின்றது என்றும் இக்குழுவினர் கருதுகின்றனர்.

இன்னும் சுமார் ஐந்து ஆண்டுகளில் இந்நிலைமை மோசமடையலாம் என்றும் இது நீடிக்குமானால் இனந் தெரியாத நோய்களினால் மக்கள் துன்புறும் நிலை ஏற்படும் என்றும் இவர்கள் கருதுகின்றனர்.

## ஆசிரியப் பயிற்சிபெற்ற தோ. பாடசாலை ஆசிரியர்க்கு விரைவில் அரச நியமனம்

### இ. த. ஆ. சங்கசெயலாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

1978 டிசம்பரில் ஆசிரிய பயிற்சியை முடித்து வெளியேறிய தோட்டப் பாடசாலை ஆசிரியர்கட்கு மிக விரைவில் அரச பாடசாலைகளில் நியமனம் கிடைக்குமென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

பயிற்சி முடிந்த 22 ஆசிரியர்களில் 17 ஆசிரியர்கட்கு அண்மையில் நடைபெற்ற தோட்டப் பாடசாலை சுவீகரிப்பின்போது நியமனம் வழங்கப்பட்டுவிட்டன. எஞ்சிய 5 ஆசிரியர்கட்கும் உடனடியாக அரச பாடசாலைகளில் நியமனம் வழங்க வேண்டும் என்று சங்கம் தொடர்ச்சியாக கல்வி அமைச்சு அதிகாரிகளையும்; கிராமியக் கைத்தொழில் அமைச்சரையும் வற்புறுத்தி வந்தது.

அண்மையில் திரு. மகாசிவம் கல்வி அமைச்சின் தமிழ்ப்பிரிவுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் திரு. இ. கே சண்முகநாதன்கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. டி. எம். ஜே. தும்புகொல ஆகியோருடன் தொடர்பு கொண்டு நடத்திய கலந்துரையாடலின் விளைவாக இந்த 5 ஆசிரியர்களுக்கும் அரச பாடசாலைகளில் நியமனம் வழங்க வேண்டுமென அமைச்சின் செயலாளர் சிபார்சுசெய்து, கல்விச் சேவைக் குழுவின் அங்கீகாரத்தை கோரியுள்ளார் கல்விச் சேவைக் குழுவின் அங்கீகாரம் கிடைத்ததும் இவர்களுக்கு மலையகப் பகுதிகளில் உள்ள அரச பாடசாலைகளில் நியமனம் கிடைக்குமென அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. தும்புகொல திரு மகாசிவத்திடம் உறுதி அளித்துள்ளார். (கு)

## வேலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்குமான இயக்கத்தின் அனுராதபுரக் கிளையின் தலைவர் வண. என். தொம்பே கலந்து கொள்வர். மேற்படி இயக்கத்தின் சார்பிலேயே இவ்வுண்ணாவிரதம் நடைபெறவிருக்கிறது.

## அமெரிக்க பணயக்கைதிகள் இன்று விடுதலையாவர்?

(நியூயோர்க்)

ஈரானில் பணயமாக வைக்கப்பட்டுள்ள அமெரிக்கர்கள் இன்று விடுதலை செய்யப்படக் கூடும் என்று அமெரிக்க தொலைக்காட்சி நிறுவனமொன்று அறிவித்துள்ளது.

இத்தகவலை ஐ. நா. வில்அங்கம் வகிக்கும் அரபு நாடொன்றின் ராஜதந்திரி கூறியதாக இச் செய்தி தெரிவித்தது. ஆனால் கொலம்பியா தொலைக்காட்சி நிறுவனம் அடுத்த வார நடுப்பகுதியிலேயே அமெரிக்கப் பணயக் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று ஜோஷியம் கூறுகின்றது.

கடந்த ஒருவருடகாலமாக இந்த அமெரிக்கப் கைதிகள் ஈரானில் பணயம் வைக்கப்பட்டுள்ளனர்,

அபடான் நகரில் மக்கள் வாழும் பகுதிகளில் ஈராக்கியர் குண்டு வீசியதாக ஈரான் குற்றசாஞ்ட்டியுள்ளது. இந்த நகர்ப்பகுதியில் ஈராக்கியர் விமானத்தாக்குதலுடன் ரொக்கட் தாக்குதல்களையும் நடத்தி வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

### பிந்திய செய்தி

அமெரிக்க பணயக் கைதிகள் இன்று விடுதலை செய்யப்படுவார்கள் என்று அமெரிக்க் தொலைக்காட்சி வெளியிட்ட செய்தியை ஈரான் திட்டவட்டமாக மறுத்துள்ளது. (கு)

## "ஆப்கான்மக்களைசோவியத் துருப்புக்கள்தாக்குகின்றன"

### யுனஸ்கோ கூட்டத்தில் தூதுக்குழுத்தலைவர்

பெல்கிரேட், அக். 25

ஆப்கானிஸ்தானில், சோவியத் இராணுவத்தினர் தலையிட்டுவருவதால் நாடு சுதந்திரமான நிலையில் இல்லையென்று ஆப்கானிஸ்தான் தலைவர் ஒருவர் கூறியுள்ளார்.

இங்கு நடைபெற்ற யுனெஸ்கோ ஸ்தாபனத்தின் கூட்டமொன்றில் கலந்துகொண்ட ஆப்கானிஸ்தான் தூதுக்கோஷ்டியின் தலைவர் அக்கூட்டத்தில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

சோவியத் துருப்புக்கள், பெண்களையும், குழந்தைகளையும் நசுக்கிவருகின்றன என்றும், தெரிவித்த அத்தலைவர், சோவியத் துருப்புக்களின் இந் நடவடிக்கையால் 10 லட்சம் மக்கள் தமது இல்லங்களை விட்டு வெளியேறியதுடன், இவர்களிற் பலர் பாகிஸ்தானுக்குத் தப்பி ஓடிவிட்டார்கள் என்றும் கூறினார்.

இவ்வருட முற்பகுதியில் ஆப்கானிஸ்தானின் தற்போதைய தலைவர் திரு. கர்மல், சோவியத் யூனியனின் உதவியுடன் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றியதும், அதனைத் தொடர்ந்து சோவியத் துருப்புக்கள் அங்கு நிலைகொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (கு)

## மாடு குத்தி இளைஞர் பலி!

(யாழ்ப்பாணம்)

பட்டியொன்றில் வளர்க்கப்பட்டுவந்த நாம்பன் மாடு ஒன்று ஆவேசங்கொண்டு, பட்டி பராமரிப்பு செய்யும் இளைஞனை கொம்பினால் குத்தியதையடுத்து இளைஞன் பரிதாபமாக மரணமானான்.

இச்சம்பவம் நேற்று நண்பகல், யாழ் கே.கே எஸ் வீதியிலுள்ள தேநீர் கடையொன்றிலுள்ள மாட்டுப் பட்டியில் இடம் பெற்றது.

பதினெட்டு வயதுடைய காமினி என்ற இளைஞரே இவ்வாறு மரணமானவராவார். (கு)

## விவசாய அபிவிருத்திக்காக பூர்வாங்க கணிப்பீடு

(புலோலி)

யாழ். மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தியை மேற்கொள்வதற்கான துரிதநடவடிக்கைகளை விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இதற்கிணங்க யாழ். மாவட்டத்தில் பயிரிடப்படும் காணிகளின் அளவு அதன் தன்மை, பயிர்களின் வகைகள், அவைகளின் உற்பத்தித்திறன், போன்றனபற்றி ஆராய்வதற்கான புள்ளி விபரங்களைத் திரட்டுவதற்காக புலோலி, வேலணை, புத்தூர், கிளிநொச்சி, இராமநாதபுரம், பூநகரி ஆகிய ஆறுசமநலச் சேவை நிலையங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இக்கமநலச் சேவை நிலையங்களுக்குட்பட்ட பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் இப்புள்ளி விபரங்களையும் கணிப்பீட்டையும் மேற்கொள்வதற்கெனத் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பயிற்சிகளும் போதனைகளும் அளிக்கப்பட்டன.


## மரண அறிவித்தல்

ஸ்ரீ வத்சராஜசர்மா
சுன்னாகம்

சுன்னாகம் கதிரமலைச்சிவன்தேவஸ்தானம் நா.சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களின் சிரேஷ்ட புத்திரன் செல்வன் ஸ்ரீ வத்சராஜசர்மா 25-10-80 அன்று அகால மரணமடைந்தார். அன்னாருடைய இறுதிக் கிரியைகள் 26-10-80 காலை 9-00 மணியளவில் சுன்னாகத்தில் நடைபெறும்.

தகவல்:
நா. சோமாஸ்கந்தக் குருக்கள்

7187


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டட் ஸ்தாபன தாரால் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கோவில் வீதி, 63 ம் இலக்க அச்சகத்தில் அக். 26 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a Newspaper at General Post Office Sri Lanka under No. GB 8948/78 The Eelanaadu P.B. No 49 Tgrame Eelanaadu, Phone, 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org